# உதயன்

விலை ரூபா 7.00

சுடர்:16 வள்ளுவர் ஆண்டு 2032 ஐப்பசி 01 வியாழக்கிழமை (18-10-2001) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:326


# கூட்டணியின் சின்னத்தில் போட்டியிட நான்கு தமிழ்க் கட்சிகளும் இணக்கம்!

## வேட்பாளர் எண்ணிக்கை பங்கீடு குறித்தும் முடிவு

கொழும்பு,ஒக்ரோபர்,18

**எதிர்வரும் பொதுத் தேர்தலில் தமிழர் வாழும் பிரதேசங்களில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் 'உதயசூரியன்' சின்னத்தில் பொதுவேட்பாளர் பட்டியலைச் சமர்ப்பித்துப் போட்டியிடுவது என்று தமிழர் விடுதலைக் கூட்டணி, ரெலோ, அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ், ஈ.பி.ஆர்.எல்.எவ்.(சுரேஷ்) அணி ஆகிய நான்கு தமிழ்க்கட்சிகள் அடங்கிய கூட்டமைப்பு முடிவு செய்துள்ளது.**

**கூட்டமைப்பு சார்பில் தேர்தல் மாவட்டங்கள் ரீதியாகச் சமர்ப்பிக்கப்படும் வேட்பாளர் பட்டியலில் ஒவ்வொரு கட்சிக்கும் எத்தனை இடங்கள் ஒதுக்குவது என்பது குறித்தும் இந்தக் கட்சிகள் முடிவுக்கு வந்துவிட்டதாகத் தெரிய வருகின்றது.**

கொழும்பில் நேற்றிரவு இந்தக் கட்சிகளின் தலைவர்கள் ஒன்றுகூடி நீண்டநேரம் நடத்திய ஆலோசனைக் கூட்டத்திலேயே இவ்விடயங்கள் குறித்து முடிவுகள் எடுக்கப்பட்டன.

இதன்படி 12 பெயர்கள் அடங்கியிருக்கவேண்டிய யாழ்மாவட்ட வேட்பாளர் பட்டியலில் ஏழு இடங்கள் தமிழர் விடுதலைக் கூட்டணிக்கும் மூன்று இடங்கள் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ"க்கும் இரண்டு இடங்கள் ரெலோவுக்கும் வழங்கப்படும். இவற்றுக்குள் ஓரிடத்தை ஈ.பி.ஆர்.எல்.எவ். (சுரேஷ்) அணிக்கு வழங்குவது

(14ஆம் பக்கம் பார்க்க)

## சங்கரி, செல்வம் நேற்று சந்திரசேகரனுடன் பேச்சு

கொழும்பு,ஒக்.18

தமிழர் விடுதலைக் கூட்டணியின் சிரேஷ்ட உப தலைவர் வீ.ஆனந்தசங்கரி, ரெலோ அமைப்பின் முதல்வர் செல்வம் அடைக்கலநாதன் ஆகியோரை மலையக மக்கள் முன்னணியின் தலைவர் பெ.சந்திரசேகரன் நேற்றுக் கொழும்பில் சந்தித்துப் பேச்சு நடத்தினார்.

தமிழ்மக்களின் வாக்குகள் சிதறடிக்கப்படாமல் - தமிழர்களின் நாடாளுமன்ற உறுப்புரிமை முழுமையாகப் பாதுகாக்கவேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது.

வடக்கு - கிழக்கில் வாழும் இந்திய வம்சாவளித் தமிழர்களின் ஆதரவை பெற்றுக்கொடுக்க மலையக மக்கள் முன்னணி ஆற்றக்கூடிய பங்களிப்புக் குறித்தும் -

இந்தச் சந்திப்பில் கலந்துரையாடப்பட்டதாக சந்திரசேகரன் தெரிவித்தார்.

அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சித் தலைவர் அ.விநாயகமூர்த்தியை இன்று சந்தித்துப் பேச உள்ளதாகவும் அவர் மேலும் சொன்னார்.

(ம-4)

## அமைச்சர் கதிர்காமர் தலைமையில் கொழும்பில் தேர்தல் பிரசாரம்?

கொழும்பு,ஒக்.18

கொழும்பு மாவட்டத் தேர்தல் பிரசாரத்துக்குத் தலைமையேற்கும்படி வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரை, பொதுமக்கள் ஐக்கிய முன்னணி கோரியிருப்பதாக கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஆனால் இந்தக் கோரிக்கையை அமைச்சர் கதிர்காமர் இன்னமும் ஏற்றுக்கொண்டதாகத் தெரியவில்லை.

பொதுத் தேர்தல்கள் எதிலும் போட்டியிடாத லக்ஷ்மன் கதிர்காமர் 1994 மற்றும் 2000ஆம் ஆண்டுப் பொதுத் தேர்தல்களின் பின்னர் தேசியப் பட்டியல் எம்.பியாக நியமனம் பெற்று, பின்னர் வெளிவிவகார அமைச்சராகவும் பதவியேற்றிருந்தார்.

பொதுத்தேர்தல் எதனையும் நேர

(14ஆம் பக்கம் பார்க்க)

## வன்னிக்கான எரிபொருள் தட்டுப்பாட்டை ஆட்சேபித்து உயர்நீதிமன்றத்தில் வழக்கு!

கொழும்பு,ஒக்.18

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள வன்னிப் பிரதேசத்துக்கு எரிபொருள் மற்றும் மண்ணெண்ணெய் எடுத்துச் செல்வதற்குத் தடைவிதிக்கப்பட்டிருப்பதை ஆட்சேபித்து அப்பிரதேசத்தைச் சேர்ந்த ஆறு பொதுமக்களின் சார்பில் உயர் நீதிமன்றத்தில் அடிப்படை உரிமைமீறல் மனு தாக்கல் செய்யப்பட்டிருக்கின்றது.

விவசாய மற்றும் கடற்றொழிலாளர் குடும்பங்களின் சார்பில் கந்தையா சிவனேசன் என்பவரும் மற்றும் ஐந்து பொதுமக்களும் இந்த மனுக்களைத் தாக்கல் செய்துள்ளனர்.

சட்டமா அதிபர், இராணுவத் தளபதி, வவுனியாவில் உள்ள 211 ஆவது படையணியின் பிரிகேட் தளபதி ஆகியோர் இந்த மனுக்களில் பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டுள்

(14ஆம் பக்கம் பார்க்க)

## திருட்டுச் சந்தேகநபர் படுகொலை விழிப்புக்குழு உறுப்பினர் கைது!

### பருத்தித்துறையில் பரபரப்பு

வடமராட்சி,ஒக்.18

பருத்தித்துறையில் கடந்த திங்கள் என்று இரவு திருட்டுச் சந்தேகநபர் எனக் கருதப்படும் நபர் ஒருவர் கொலையுண்ட சம்பவம் தொடர்பாக அன்றிரவு அப்பகுதியில் கடமையில் இருந்த விழிப்புக்குழு உறுப்பினர்கள் 8பேர் பொலீஸாரால் கைது செய்யப்பட்டனர்.

நள்ளிரவு வேளை பருத்தித்துறை சிவன்கோயிலடியில் சந்தேகத்துக்கு இடமான முறையில் நடமாடிய ஒருவரை விழிப்புக்குழுவினர் பிடித்து விசாரித்த பின்னர் பொலீஸில் ஒப்படைத்துள்ளனர்.

அதேதினம் இவருடன் சேர்ந்த இன்னுமொருவரையும் விழிப்புக்குழு

(14ஆம் பக்கம் பார்க்க)

## பூமிபுத்திரவும் ஐ.தே.கவுடன் இணைவு?

கொழும்பு,ஒக்.18

கடந்த பொதுத் தேர்தலில் விமான சின்னத்தில் போட்டியிட்டு படுதோல்வியடைந்த பூமிபுத்திர கட்சி இந்த முறை ஐ.தே. கட்சியுடன் இணைந்து யானைச் சின்னத்தில் போட்டியிடவுள்ளது.

சிங்கள பௌத்தர்களினது உரிமை

(14ஆம் பக்கம் பார்க்க)

## நந்தமித்ர எக்கநாயக்கா பொ.ஐ.முவிலிருந்து விலகினார்

### ஐ.தே.கட்சியில் இணையக்கூடும்

கொழும்பு,ஒக்.18

முன்னாள் அமைச்சர் நந்தமித்ர எக்கநாயக்கா பொதுமக்கள் ஐக்கிய முன்னணியில் இருந்து விலகியுள்ளார்.

பொ.ஐ.முன்னணியின் மாத்தளை மாவட்ட எம்.பியாக கடந்த 12 வருடங்களாகச் செயற்பட்டுவந்த அவர், நேற்று கொழும்பில் உள்ள தமது உத்தியோகபூர்வ இல்லத்திலிருந்து வெளியேறினார்.

பொ.ஐ.முன்னணியில் இருந்து வெளியேறுவது தொடர்பாகத் தாம் ஜனாதிபதி குமாரதுங்கவுக்கு கடிதம் மூலம் அறிவித்துவிட்டதாக அவர் சொன்னார்.

பொ.ஐ.முன்னணியிலிருந்து வெளியேறி ஐ.தே.கட்சியுடன் இணைந்து செயற்படும் - எஸ்.பி.திஸநாயக்கா தலைமையிலான - குழுவில் இவர் இணைவார் என எதிர்பார்க்கப்படுகின்றது. (உ)

## தேர்தல் கால பாதுகாப்புப் பற்றி நேற்று மாநாடு

கொழும்பு,ஒக்.18

தேர்தல் காலப் பாதுகாப்பு ஏற்பாடுகள் தொடர்பாக பொலீஸ்மா அதிபர் லக்கி கொடித்துவக்கு தலைமையில் நேற்று மாலை பொலீஸ் தலைமையகத்தில் மாநாடு ஒன்று நடைபெற்றது.

சிரேஷ்ட பொலீஸ் அதிகாரிகள் பலர் கலந்துகொண்ட இந்த மாநாட்

(14ஆம் பக்கம் பார்க்க)

## விழிப்புக் குழு உறுப்பினர்களை விடுவிக்கக் கோரி நேற்று மறியல்

### அதனால் பருத்தித்துறைப் பகுதி ஸ்தம்பித்தது

வடமராட்சி,ஒக்.18

பருத்தித்துறை மாதனைப் பகுதியில் இருந்து சடலம் ஒன்று மீட்கப்பட்டது தொடர்பாகப் பொலீஸாரால் கைது செய்யப்பட்ட பருத்தித்துறை விழிப்புக்குழு உறுப்பினர்கள் 8 பேரையும் விடுதலை செய்யுமாறு கோரி நேற்று பருத்தித்துறையிலிருந்து மாலி சந்தி வரையான பகுதிகளில் பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது; மறியல் போராட்டங்களும் இடம்பெற்றன.

இதனால் இந்தப் பகுதிகளில் இயல்பு வாழ்க்கை முற்றாக ஸ்தம்பிதமடைந்தது. வர்த்தக நிலையங்கள், பாடசாலைகள், அரச திணைக்களங்கள், அலுவலகங்கள் அனைத்தும்

(14ஆம் பக்கம் பார்க்க)


பெற்றோர்களே!

மறந்துவிடாதீர்கள்!!

MANKIND IS OUR BUSINESS

உங்கள் குழந்தைகளுக்கு போலியோ தடுப்பு சொட்டுமருந்து கொடுக்கும் தினம் [20.10.2001] சனிக்கிழமை

PolioPlus Rotary International

- யாழ். றோட்டறிக் கழகம்.

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்



யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நேற்று இடம்பெற்ற பத்திரிகையாளர் நிமலராஜனின் முதலாம் ஆண்டு நினைவு தினக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தலைவர் எஸ்.கஜேந்திரன், மூத்த பத்திரிகையாளர் எஸ். பெருமாள், வடஇலங்கைப் பத்திரிகையாளர் சங்கத் தலைவர் எஸ்.கதிர்காமத்தம்பி, வணபிதா சீ.ஜீ.ஜெயக்குமார் ஆகியோரைப் படங்களில் காணலாம். *(படங்கள்: கொனிகா கலர் லாப்)*

## நூல் அறிமுக விழா

யாழ்ப்பாணம்,ஒக்.18

அ.யேசுராசாவின் "தூவானம்" கலை இலக்கியப் பதிவுகள் நூல் அறிமுகவிழா எதிர்வரும் 21ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 5மணிக்கு யாழ். திருமறைக்கலாமன்றத்தின் கலைத்தூது மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

செம்பியன் செல்வன் தலைமையில் நடைபெறும் இந்த விழாவில் விமர்சனவுரைகளை குப்பிளான் ஐ.சண்முகன், பொன்பூலோகசிங்கம், அருள்திரு. அ.ஜெயசேகரம் அடிகள், ஜோன்சன் ராஜ்குமார் ஆகியோர் நிகழ்த்துவர்.

(ம-7)

# மலையகக் கட்சிகளை ஒன்றிணைத்து ஓரணியில் போட்டியிடச் செய்ய முயற்சி

## மலையக மக்கள் முன்னணி பகீரதப் பிரயத்தனம்

கொழும்பு,ஒக்.18

மலையகக் கட்சிகள் அனைத்தையும் ஒன்றிணைத்து எதிர்வரும் தேர்தலில் போட்டியிடச் செய்வதற்காக மலையக மக்கள் முன்னணி பகீரத முயற்சிகளை மேற்கொண்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பாக மலையகத்திலுள்ள அனைத்துக் கட்சிகளுடனும் மலையக மக்கள் முன்னணியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் பேச்சுக்களை நடத்திவருவதாகவும் -

இந்தப் பேச்சுக்களின் போது மலையக மக்கள் முன்னணியுடன் இணைந்து போட்டியிடுவதற்கு இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் இணங்கியிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை -

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஐக்கிய தேசியக் கட்சியுடனும் -

தேசிய ஐக்கிய முன்னணி பொது மக்கள் ஐக்கிய முன்னணியுடனும் இணைந்து போட்டியிடப்போவதாக ஏற்கனவே அறிவித்திருந்தமை தெரிந்ததே. (ம-4)

# தமிழ்க்கட்சிகள் அனைத்தும் இணைந்து போராட்ட வலுவை அதிகரிக்கவேண்டும்

## எல்லாளன் படை துண்டுப்பிரசுரம்

யாழ்ப்பாணம்,ஒக்.18

தமிழ்த் தேசிய நலனைக் கருத்திற் கொண்டு தமிழினத்தின் விடிவில் உண்மையான அக்கறையோடு, தமிழ்க் கட்சிகள் ஒன்றிணைந்து, போராட்ட வலுவை அதிகரிக்கவேண்டும்.

- இவ்வாறு 'எல்லாளன்' படை என்ற பெயரில் நேற்று யாழ்நகரில் விநியோகிக்கப்பட்ட துண்டுப்பிரசுரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்தப் பிரசுரத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

கடந்த காலங்களில் சிங்களப் பேரினவாத ஆட்சிப்பீடங்களினால் எமது மக்கள் மீது திட்டமிட்ட ரீதியில் கட்டவிழ்த்துவிடப்பட்டுவந்த அநீதிகளுக்கு எதிராகத் தமிழ் இளைஞர்கள் அஹிம்சை வழியில் போராடி, அது பயனளிக்காத நிலையில் - மாற்றுவழிகளற்ற நிலையில் - ஆயுதப் போராட்டத்தில் குதித்தமை அனைவரும் அறிந்ததே. விலை மதிக்க முடியாத பல அர்ப்பணிப்புகளின் பின், பல தடைகளையும் உடைத்தெறிந்துகொண்டு தமிழ்மக்களின் விடியலை அண்மித்துள்ள தமிழ்மக்களின் விடுதலைப் போராட்டம் தமிழ் மக்களிடம் பெற்றுவரும் ஆதரவு, சிங்களப் பேரினவாதிகளையும்; தமிழ் மக்களைத் தொடர்ந்தும் அடக்கியாழலாம் என்று கற்பனை பண்ணியவர்களையும் கிலிகொள்ள வைத்துள்ளது.

தவிர்க்கமுடியாத இந்த நிலையிலேயே தமது தாளத்திற்கேற்ப ஆடக்கூடிய போலியான தமிழ்த் தலைமைத்துவத்தை உருவாக்கி அவர்கள் மூலம் தமிழ் மக்களின் விடுதலை உணர்வைத் தணிக்க பேரினவாத ஆட்சிப்பீடங்கள் பிரயத்தனம் செய்து வருகின்றன.

இந்த நிலையில்தான் தேர்தலொன்றுக்கு முகங்கொடுக்கவேண்டிய நிலை மக்களுக்கு ஏற்பட்டுள்ளது. எனவே சிங்களப் பேரினவாதத்தின் கபடத்தனமான திட்டத்தை மேலும் முன்னெடுக்கவிடாமல் தடுக்கவேண்டிய பொறுப்பு - தமிழினத்தின் எதிர்வரும் சந்ததியாவது சுதந்திரமாகவும் உரிமைகளுடனும் சுயகௌரவத்துடனும் வாழவேண்டும் என்பதில் அக்கறையுடைய - ஒவ்வொரு தமிழ் மகனையும் சாரும்.

எனவே உலகமே வியக்கும் வண்ணம் பல அர்ப்பணிப்புக்களை எமது விடிவுக்காகச் செய்துவரும் தமிழ் இனத்திற்கு பெருமை தேடித் தந்துகொண்டிருக்கும் தமிழ்த் தேசிய தலைமையானது எமது இனத்தின் விடியலை அண்மித்துள்ள இவ்வேளையில், அதற்குப் பக்கபலமாக இருக்கக்கூடிய வகையில், எந்தத் தமிழ் இன விரோத சக்திகளுக்கும் இடங்கொடாத வகையில், அற்ப சொற்ப நலன்களுக்காக பிளவுபட்டு நிற்காமல், தமிழ்த் தேசிய நலனைக் கருத்திற்கொண்டு தமிழினத்தின் விடிவில் உண்மையான அக்கறையோடு தமிழ்க் கட்சிகள் ஒன்றிணைந்து, போராட்ட வலுவை ஆதரிக்கவேண்டும் என்பதே விடுதலை உணர்வுகொண்ட அனைவரினதும் அவா ஆகும்.

தமிழ் மக்களின் பிரதிநிதிகள் எனத் தம்மைக்கூறிக்கொள்ளும் தமிழ்த் தேசியத்துக்கு விரோதமான சக்திகளை எமது மக்கள் இனங்கண்டு தகுந்த பாடம் புகட்டுவார்கள் - என்றுள்ளது. (ம)

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

பூப்புப் புனித நீராட்டு விழா அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான விஷு வருடம் ஐப்பசி மாதம் முதலாம் திகதி இன்று (18-10-2001) வியாழக்கிழமை பகல் 10.22 முதல் 12.18 வரையில் வரும் தனு லக்கின சுபமுகூர்த்த வேளையில்

எமது சிரேஷ்ட புதல்வி திருவளர் செல்வி "தர்ஷிகா" அவர்களுக்கு

பூப்புப் புனித நீராட்டுவிழா நடத்தப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து செல்வியை ஆசீர்வதிக்கும் வண்ணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இதனைத் தனிப்பட்ட அழைப்பாக அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*வரவேற்பாளர்கள்:*

திரு.திருமதி நடராசா வரதராஜா பத்தர் (குடும்பம்) - உரும்பிராய் (பெரியப்பா)

திரு.திருமதி சீனிவாசகம் பாலகிருஸ்ணன் (குடும்பம்) - சங்குவேலி (பேரன்)

*இல.64, காரைக்காட்டு லேன்,*
*வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.*
*(கோல்ட் வேக்ஸ் கொமினிக்கேசன்)*
*தொலைபேசி இல. : 021 - 3432*

தங்கள் நல்வரவை நாடும்:
நடராசா கோவிந்தராசா - பேரின்பராணி
குடும்பத்தினர்.

(93506)

## முதியோர், சிறுவர் தினவிழா

யாழ்ப்பாணம்,ஒக்.18

நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் பணிமனை நடத்தும் முதியோர், சிறுவர் தினவிழா நாளை வெள்ளிக்கிழமை நெடுந்தீவு மேற்கு சைவப் பிரகாச வித்தியாசாலையில் உதவி அரசாங்க அதிபர் ஜே.எக்ஸ். செல்வநாயகம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த விழாவில் முதியோர் கௌரவிப்பு, சிறுவர்களுக்குப் பரிசில் வழங்கல், விசேட சொற்பொழிவு என்பன இடம்பெறும்.

நெடுந்தீவுக்கான சமூக சேவை உத்தியோகத்தர் வி.கே. முருகையா இதற்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளது. (ம-7)

★ ★ ★

பருத்தித்துறை பிரதேச செயலக சமூகசேவைகள் பிரிவினர் நடத்தும் முதியோர் தின விழா நாளை வெள்ளிக்கிழமை காலை 10மணிக்கு பிரதேச செயலர் ஆ.சிவசுவாமி தலைமையில் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும்.

நிகழ்வில் பிரதேச முதியோர் கௌரவிப்பு, மாணவர்களுக்கான பரிசளிப்பு ஆகியன இடம்பெறும். (ம-117)

## கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,ஒக்.18

தரம்7 மற்றும் 8ஆம் வகுப்புக்களுக்கான உடற்கல்விப் பாடம் தொடர்பான கருத்தரங்கு நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 9 மணிக்கு நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் இடம்பெறவுள்ளது. சம்பந்தப்பட்ட ஆசிரியர்கள் அனைவரும் கருத்தரங்கில் கலந்துகொள்ளுமாறு தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார்.(ஓ)

★ ★ ★

தென்மராட்சி,ஒக்.18

சாவகச்சேரி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கப் பணியாளர்களுக்கான கருத்தரங்கு நாளை காலை 9 மணிக்கு சங்க மண்டபத்தில் தலைவர் செ.சுப்பிரமணியம் தலைமையில் நடைபெறும்.

'கிளைக் கடைகளில் விற்பனையும் அபிவிருத்தியும்' என்ற விடயம் தொடர்பாக சங்க இயக்குநர் கருத்துரை வழங்குவர். (ம-117)

மங்களகரமான திறப்பு விழா அழைப்பு

அன்புடையீர்! பல்லாயிரக்கணக்கான மக்களின் அபிமானத்துக்குரிய,
யாழ்நகரில் பிரபல்யம் வாய்ந்த எமது நிறுவனமான
கரன் வோச் அன் றேடியோ
ஸ்தாபனத்தாரின் மற்றுமோர் புதிய நிறுவனமான

கரன் ரெக்ஸ்
புடைவை ஸ்தாபனம்
106, பஜார் வீதி, யாழ்ப்பாணம்.

ஒன்றை -
நிகழும் விஷு வருடம் ஐப்பசி மாதம் முதலாம் நாளான இன்று (18.10.2001) வியாழக்கிழமை முற்பகல் 11.00 மணி முதல் 12.00 மணி வரையுள்ள சுபமுகூர்த்த வேளையில் ஆரம்பித்து வைக்கவுள்ளோம்.

அத்தருணம் அன்பர்கள், நண்பர்கள், ஆதரவாளர்கள், வாடிக்கையாளர்கள், வர்த்தகப் பெருமக்கள் அனைவரையும் விழாவில் பங்குபற்றிச் சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

கரன் ரெக்ஸ்: 106, பஜார் வீதி, யாழ்ப்பாணம்.
கரன் வோச் அன் றேடியோ: 91, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
கரன் வோச் அன் றேடியோ: சுன்னாகம்.

*உரிமையாளர்:*
திரு.நீ.சுதாகரன் (சுதன்)

(C/18752)

# தலிபான்களுக்கு எதிராக அமெரிக்கா உளவியல் போர்

காபூல்,ஒக்.18

ஆப்கானிஸ்தான் மீது இராணுவத் தாக்குதலை மேற்கொண்டுள்ள அமெரிக்கா, மறுபுறத்தில் தலிபான்களுக்கு எதிரான உளவியல் போரையும் ஆரம்பித்துள்ளது.

இதில் ஒரு கட்டமாக இராணுவ விமானங்கள் மூலம் பெருமளவு நிவாரணப் பொருள்களை ஆப்கானிஸ்தானில் அமெரிக்கா போட்டு வருகிறது.

ஆனால் இவை அங்குள்ள பெண்கள், குழந்தைகள் உட்பட பொதுமக்களுக்குக் கிடைப்பதைவிட தலிபான்களுக்கே அதிகம் கிடைப்பதாக ஐநா நிவாரண உதவியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

அத்துடன் ஐ.நா.ஊடாக அமெரிக்கா வழங்கும் சில உதவிப் பொருள் பொதிகளிலும் அமெரிக்கா என எழுதப்பட்டுள்ளது. ஆனால் சொந்த மொழியையே எழுதத் தெரியாத பெரும்பாலான ஆப்கானியர்களுக்கு அமெரிக்கா தந்த பொருள்கள் என்பது புரியவில்லை என்று கூறப்படுகிறது.

அத்துடன் ஆப்கானிய மக்களுக்காக வானொலி சேவை ஒன்றையும் அமெரிக்கா ஆரம்பித்துள்ளது. சீ-130ரக விமானம் ஒன்றிலிருந்து இந்த வானொலி சேவை ஒலிபரப்பப்படுவ ..க நம்பப்படுகிறது.

தலிபான்களின் உத்தியோகபூர்வ வா..லியான 'ஷரியத்தின் குரல்' ஒலிபரப்பு நிலையம் அமெரிக்க விமானத் தாக்குதலில் அழிக்கப்பட்டுவிட்ட நிலையில், அமெரிக்க இராணுவத்தின் மனோதத்துவ நடவடிக்கைப் பிரிவு இந்த வானொலி சேவையை இயக்குவதாகக் கூறப்படுகிறது.

இந்த வனொலியில் அமெரிக்கா ஆப்கானிய மக்களின் தோழன் என்றும் -

ஒலி அரங்கில்

ஒஸாமா பின்லேடனைப் பிடிப்பது மட்டுமே அமெரிக்காவின் பணி என்றும் - உள்ளூர் மொழிகளில் பிரசாரம் செய்யப்படுவதுடன் தலிபான்களுக்கு எதிரான பல குற்றச்சாட்டுக்களும் கூறப்படுகின்றன.

ஆயினும் இந்த ஒலிபரப்பு வெறும் பாசாங்கு வார்த்தைகளைக் கொண்டிருப்பதாகவும் எரிச்சலூட்டுவதாகவும் இதன்மூலம் தம்மை திசை திருப்புவது இயலாத காரியம் என்றும் ஆப்கானியர்கள் தெரிவித்துவருவதாகத் தெரிவிக்கப்பட்டது.

வானொலி ஒலிபரப்பு உட்பட தலிபானுக்கு எதிரான உளவியல் நடவடிக்கைகளில் தலிபான்களுக்கு எதிரான வடக்குக் கூட்டணி அமெரிக்காவுக்கு உதவுவதாகக் கூறப்படுகிறது. (ஒ-4)

## ஆப்கானில் தலிபான்கள் தங்கியிருந்த

# புராதன மலைக்கோட்டை மீது அமெரிக்கா வான் தாக்குதல்

## 4பேர் பலி; 8பேர் காயம்

இஸ்லாமாபாத்,ஒக்.18

அமெரிக்க விமானங்கள் நேற்று அதிகாலை 3 மணிமுதல் ஆப்கானிஸ்தானின் தென்புற நகரான கந்தகாரின் மீது தாக்குதல் நடத்தியதில் 4பேர் கொல்லப்பட்டதாகவும் - 8பேர் காயமடைந்ததாகவும் - தெரிவிக்கப்பட்டது.

கந்தகாரின் ஒரு பகுதி தீப்பற்றி எரிந்து கொண்டிருப்பதாக அங்குள்ள வெளிநாட்டுச் செய்தியாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

இதேசமயம் தலைநகர் காபூலிலும் 6 தடவைகள் பாரிய வெடிச்சத்தங்கள் கேட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

காபூலின் தென்பகுதியில் உள்ள வரலாற்றுச் சிறப்புமிக்க, புராதன மலைக்கோட்டை அமெரிக்காவின் தாக்குதலுக்கு இலக்கானது. இந்தக் கோட்டையை தலிபான் படையினர் பயன்படுத்தி வந்தனர்.

இதற்கிடையில், ஆப்கானிஸ்தானியக் கிராமத்தில் அமெரிக்க வான் தாக்குதலில் சிக்கி 300 பொதுமக்கள் உயிரிழந்ததாகத் தலிபான்கள் கூறியதை அமெரிக்கப் பாதுகாப்பு அமைச்சர் டொனால்ட் ரம்ஸ்பீல்ட் மறுத்துள்ளார்.

தவிர சண்டைக்குப் பிறகு மஷார்-இ-ஷெரீப் நகரை தாம் பிடித்துவிட்டதாக வடக்குக் கூட்டணி கூறியுள்ளது. ஆனால் இதை மறுத்துள்ள தலிபான்கள் கடந்த சில நாள்களாகவே வடக்குக் கூட்டணி இது போன்ற பொய்ப் பிரசாரங்களில் ஈடுபடுவதாகத் தெரிவித்தனர். (ஒ)

# பொதுமக்கள் உயிரிழப்புக் குறித்து ஐ.நா. செயலாளர் நாயகம் கவலை



ஜெனிவா,ஒக்.18

ஆப்கானிஸ்தான் மீதான அமெரிக்கத் தாக்குதல்களில் பெருமளவில் பொதுமக்கள் உயிரிழந்திருப்பது குறித்து, ஐநா. செயலாளர் நாயகம் கோபி அனான் கவலை தெரிவித்தார்.

இராணுவ நடவடிக்கைகளின்போது, பொதுமக்களைப் பாதுகாக்க சகல தரப்பினரும் முன்வர வேண்டும் என்றும் -

பயங்கரவாதத்துக்கு எதிராக உலகம் அணிதிரண்டுள்ள அதேவேளை, அப்பாவி மக்களைப் பாதுகாக்கச் சாத்தியமான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டுமென்றும் - கோபி அனான் மேலும் வலியுறுத்தினார்.

காபூல் விமான நிலையத்தின் மீது அமெரிக்க விமானம் வீசிய வெடிகுண்டு குறிதவறி குடியிருப்புகள்மீது வீழ்ந்ததும் -

ஆப்கானில் உள்ள ஐ.நா.மற்றும் செஞ்சிலுவைச் சங்கக் கட்டடங்கள் குண்டு வீச்சுக்கு இலக்காகியிருப்பதும் - குறிப்பிடத்தக்கது. (ஒ-4)

# பாகிஸ்தானியக் கலவரங்கள் இந்தியாவிலும் பரவும் அபாயம்

## சோனியாகாந்தி எச்சரிக்கை



புதுடில்லி,ஒக்.18

ஆப்கானிஸ்தான்மீது அமெரிக்கா நடத்தும் தாக்குதல்களால் இந்தியாவில் மதக் கலவரங்கள் தோன்றும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக இந்திய காங்கிரஸ் கட்சித் தலைவர் சோனியா காந்தி எச்சரித்துள்ளார்.

பிரதமர் வாஜ்பாய்க்கு அவர் எழுதிய கடிதத்திலேயே இந்த எச்சரிக்கை குறிப்பிடப்பட்டுள்ளது.

அமெரிக்காவுக்கு எதிராக பாகிஸ்தானில் இடம்பெற்றுவரும் வன்முறை ஆர்ப்பாட்டங்களை, அந்த நாட்டின் இராணுவ ஆட்சியாளரால் கட்டுப்படுத்த முடியாதநிலை ஏற்பட்டிருப்பதாகவும் -

அந்தக் கலவரங்கள் இந்தியாவிலும் பரவக்கூடும் என்றும் - எதிர்க் கட்சித் தலைவி சோனியா மேலும் தெரிவித்தார்.

ஆப்கானிஸ்தான்மீது அமெரிக்கா மேற்கொண்டுவரும் தாக்குதல்கள் இந்திய சிறுபான்மை மக்கள் மத்தியில் கடும் கோபத்தையும், பகைமை உணர்வையும் அதிகரித்துள்ள நிலையில், சிறிய ஒரு சம்பவம் கூட பெரிய மதக் கலவரமாக வெடித்துவிடும் அபாயம் உள்ளதாக சோனியா பிரதமருக்குத் தெரிவித்துள்ளார். (ஒ-4)

# பலஸ்தீன தனிநாடு அமைய பிரிட்டிஷ் பிரதமர் ஆதரவு

லண்டன்,ஒக்.18

சுதந்திரப் பலஸ்தீன இராச்சியம் ஒன்றை அமைப்பதற்கு பிரிட்டன் ஆதரவு தெரிவித்துள்ளது.

பிரிட்டனுக்கு விஜயம் செய்துள்ள பலஸ்தீனத் தலைவர் யஸீர் அரபாத்துடன் பேச்சு நடத்திய பின்னர் பிரிட்டிஷ் பிரதமர் ரொனி பிளயர் செய்தியாளர்களிடம் இதனைத் தெரிவித்தார்.

இஸ்ரேலின் அமைதிக்கும் பாதுகாப்புக்கும் உத்தரவாதம் அளிக்கும் வகையில் பலஸ்தீன இராச்சியம் அமைக்கப்படவேண்டும் என்றும் பிரதமர் பிளயர் வலியுறுத்தினார்.

ஆப்கானிஸ்தான் மீதான தாக்குதலுக்கு இஸ்லாமிய நாடுகளின் ஆதரவைப் பெறுவதற்காகவே, அமெரிக்காவும், பிரிட்டனும் சுதந்திர பலஸ்தீன நாடு அமைய ஆதரவு தெரிவிப்பதாக பலஸ்தீன வட்டாரங்கள் கூறியுள்ளன. (ஒ-4)

## வாஜ்பாய் - பவல் சந்திப்பு

இந்தியாவுக்கு விஜயம் செய்துள்ள அமெரிக்க வெளிவிவகார அமைச்சர் கொலின் பவல் நேற்று இந்தியப் பிரதமர் வாஜ்பாயைச் சந்தித்தார்.

ஆப்கான் பிரச்சினை, காஷ்மீர் பிரச்சினை ஆகியவை குறித்து இருவரும் பேச்சு நடத்தினர்.

முன்னதாக பாகிஸ்தான் சென்று அதிபர் முஷாரப்பை , கொலின் பவல் சந்தித்தார்.

## கஜகிஸ்தானில் கடும் வரட்சி

கஜகிஸ்தானில் கடந்த இரண்டு வருடகாலமாக நிலவும் கடும்வரட்சியினால், சுமார் 10 லட்சம் மக்கள் பஞ்சத்தில் வாடுவதாகவும் - அவர்களுக்கு அவசர உணவு நிவாரண உதவி தேவைப்படுவதாகவும் - ஐ.நா. உலக உணவுத் திட்ட அமைப்பு தெரிவித்துள்ளது.

கஜகிஸ்தான், ஆப்கானிஸ்தானின் அயல்நாடு என்பது குறிப்பிடத்தக்கது.

## காஷ்மீரில் தீவிரவாதிகள் சுட்டுக்கொலை!

ஸ்ரீநகர்,ஒக்.18

இந்தியாவின் காஷ்மீர் மாநிலத்துக்குள் பாகிஸ்தானிலிருந்து ஊடுருவ முயன்ற 7 தீவிரவாதிகளைத் தாம் நேற்றுமுன்தினம் சுட்டுக்கொன்றதாக இந்திய இராணுவத்தினர் தெரிவித்தனர்.

இதேவேளை -

ரஜோரி, புஞ்ச் மாவட்டங்களில் இடம்பெற்ற மோதல்களில் பொதுமக்களில் இருவரும் ஓர் இராணுவச் சிப்பாயும் உயிரிழந்ததாகக் கூறப்பட்டது.


## கனடாவில் அடையாள அட்டைகள் அறிமுகம்

ரொறன்ரோ,ஒக்.18

கனடாவில் குடியுரிமை பெறுவோருக்கு, புதிய அடையாள ஆவணங்கள் வழங்கப்படவுள்ளன.

தற்போதைய ஆவணங்களில் சுலபமாக மோசடிகள் செய்யப்படுவதாகவும், ஆகவே புகைப்படங்களுடன் கூடிய மின்காந்த அட்டைகளில் ஆவணங்கள் அடுத்தமாதம் முதல் வழங்கப்படவுள்ளன. (ஒ)

# ஆப்கானில் முதல் தடவையாக "பறக்கும் துப்பாக்கி முனைகள்"



வாஷிங்ரன்,ஒக்.18

ஆப்கானிஸ்தான் மீதான தாக்குதலில் முதற்றடவையாக, ஏ.சி-130 ரக விமானங்களை நேற்றுமுன்தினம் அமெரிக்கா பயன்படுத்தத் தொடங்கியது.

'ஸ்பெக்ரம்' என்று அழைக்கப்படும் ஏ.சி-130 ரக விமானங்கள் தரைக்கு மிக அண்மையாகத் தாழப்பறந்து எதிரிப் படையணிகள் மற்றும் வாகனத் தொடரணிகளைத் தாக்கியழிக்கும் திறனுடையவை.

'பறக்கும் துப்பாக்கி முனை' என்று வர்ணிக்கப்படும் இந்த விமானங்கள் 4 இயந்திரங்களையும் கணனியால் இயக்கப்படும் துப்பாக்கி வகைகளையும் கொண்டவை.

இந்த ரக விமானங்களைக் கொண்டு நேற்றுமுன்தினம் கந்தகாரில் அமெரிக்கா தாக்குதல் நடத்தியது.

ஏ.சி-130 ரகவிமானங்களின் முதல் தாக்குதலியே 13 பொதுமக்கள் கொல்லப்பட்டதாக தலிபான்கள் தெரிவித்தனர்.

தலிபான்களின் விமான எதிர்ப்புசக்தி பெரும்பாலும் முற்றாக அழிக்கப்பட்ட நிலையிலேயே, இராணுவ உபகரணங்களில் தலையானவையாகக் கருதப்படும் ஏ.சி-130 ரகவிமானங்களை அமெரிக்கா பயன்படுத்தத் தொடங்கியுள்ளதாகக் கூறப்படுகிறது. (ஒ-4)



ஆப்கானிஸ்தான் தலைநகர் காபூலில் அமைந்திருந்த செஞ்சிலுவை சர்வதேசக்குழுவின் பண்டகசாலை நேற்றுமுன்தினம் அமெரிக்க விமானங்களின் குண்டுவீச்சுக்கு இலக்காகித் தீப்பற்றி எரிந்த காட்சி.

## ஆப்கானின் எதிர்காலம் குறித்து

# பதவி கவிழ்க்கப்பட்ட மன்னர் பாகிஸ்தானுடன் ஆலோசனை

இஸ்லாமாபாத், ஒக்.18

பாகிஸ்தானிய அதிபர் ஜெனரல் பர்வேஸ் முஷாரப்பைச் சந்தித்து உரையாட, ஆப்கானிஸ்தானில் புரட்சி மூலம் முன்னர் பதவி விலக்கப்பட்ட மன்னர் அல்ஷா, மூன்று பேர்கொண்ட தூதுக் குழுவை அனுப்பியுள்ளார்.

ஆப்கானிஸ்தானின் எதிர்காலம் குறித்து இந்தக் குழுவினர் ஜெனரல் முஷ்ரப்புடன் ஆலோசனை நடத்தவுள்ளதாகவும் -

முன்னதாக பாகிஸ்தானிய வெளிவிவகார அமைச்சர் அப்துல் சதாரைச் சந்தித்து உரையாடியதாகவும் - தெரிவிக்கப்பட்டது.

அமெரிக்கத் தாக்குதல்களையடுத்து, தலிபான்களின் ஆட்சி கவிழுமானால், தற்காலிக மாற்று அரசு ஒன்றை ஆப்கானிஸ்தானில் அமைக்கும் திட்டம் ஒன்றை மன்னர் ஷா முன்வைத்துள்ளதாக பாகிஸ்தானிய வெளியுறவு அமைச்சகம் தெரிவித்தது.

தலிபான்களின் ஆட்சி கவிழும் நேரத்தில், அவர்களை எதிர்த்துப் போராடிவரும் வடக்குக் கூட்டணியினர் ஆட்சியைப் பிடித்துவிடாமல் தடுத்து, தானே மீண்டும் மன்னராகிவிடும் முயற்சியில் மன்னர் ஷா ஈடுபட்டுள்ளதாகக் கூறப்படுகிறது. (ஒ-4)

# அணிசேரா நாடுகளின் மாநாட்டை ரத்துச்செய்ய பங்களாதேஷ் முடிவு!

அணிசேரா நாடுகளின் உச்சி மாநாட்டை நடத்தப்போவதில்லை என்று பங்களாதேஷ் அறிவித்துள்ளது.

அணிசேரா இயக்கம் இறந்து போன ஒரு குதிரை என்று கூறிய பங்களாதேஷ் நிதியமைச்சர் தைபூர் ரஹ்மான் அதை அடக்கம் செய்வதற்கு கோடிக்கணக்கான டொலர்களை பங்களாதேஷ் செலவிடமுடியாது என்று தெரிவித்தார்.

அணிசேரா நாடுகளின் 13ஆவது மாநாடு அடுத்து வருடம் ஏப்ரலில் பங்களாதேஷில் நடக்கவிருந்தது. முந்தைய ஷேக் ஹசீனா அரசு இதற்கு ஒப்புக்கொண்டிருந்தது.

ஆனால் புதிதாகப் பதவியேற்ற கலீதா ஷியா அரசு, இந்த மாநாட்டை நடத்த முடியாதெனக் கூறிவிட்டது. ஆப்கானிஸ்தான் மீதான அமெரிக்கத் தாக்குதல், பங்களாதேஷின் பொருளாதார நெருக்கடி ஆகியவற்றாலேயே இந்த உச்சிமாநாட்டை நடத்த முடியவில்லை என்று பங்களாதேஷ் உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளது.

உலகப்போர்க் காலங்களில் நடுநிலை வகிக்கும் ஒரு அமைப்பாக உருவாகிய அணிசேரா இயக்கத்தின் எதிர்காலம், பங்களாதேஷின் முடிவால் கேள்விக்குறியாகியுள்ளது. (ஒ-4)

# உலக சுதந்திர விருதைப் பெறுவதற்கு தைவான் அதிபருக்கு சுதந்திரமில்லை

தைபே,ஒக்.18

தனக்குக் கிடைத்த சர்வதேச சுதந்திர விருதை நேரில் சென்றுபெற சுதந்திரமில்லை என்று தாய்வான் ஜனாதிபதி சியாவ்வு ஜியான் விசனம் வெளியிட்டுள்ளார்.

டென்மார்க் நாட்டில் இயங்கும் அமைப்பு ஒன்று வருடந்தோறும் சர்வதேச சுதந்திர விருதை வழங்கி வருகிறது.

2001 ஆம் ஆண்டுக்கான அந்த விருது தாய்வான் ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ளது.

ஆயினும் டென்மார்க்கில் அடுத்த மாதம் இடம்பெறவுள்ள விழாவுக்கு நேரில் சென்று விருதைப்பெற அவருக்கு 'விஸா' வழங்கப்படவில்லை என்று கூறப்படுகிறது.

டென்மார்க், சீனாவை அங்கீகரித்துள்ள போதிலும், தைவானை ஒரு நாடாக அங்கீகரிக்கவில்லை. தைவானைத் தனது கட்டுப்பாட்டுக்குட்பட்ட ஒரு மாகாணமாகவே சீனா கூறி வருகிறது.

தான் இராஜாங்க உறவு வைத்துள்ள நாடுகளுக்கு தைவானியத் தலைவர்கள் செல்வதையும் சீனா எதிர்த்து வருகிறது. (ஒ-4)

## எதிர்வரும் 23, 24 ஆம் திகதிகளில்
# மானிப்பாய் சுகாதாரப் பிரிவில் நாய்களுக்குத் தடுப்பூசி ஏற்றல்

மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் உள்ள ஆனைக்கோட்டை, சுதுமலை, மானிப்பாய், சுட்டுடை ஆகிய பகுதிகளில் எதிர்வரும் 23, 24 ஆம் திகதிகளில் வளர்ப்பு நாய்களுக்குத் தடுப்பூசி ஏற்றப்படவுள்ளதாக மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி அறிவித்துள்ளார்.

விவரம் வருமாறு:-

23 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை—ஆனைக்கோட்டை, பொதுச்சுகாதாரப் பிரிவு:-

★ காலை 9 — 10 மணி, சுதுமலை மத்திய சனசமூக நிலையம் (குண்டடி)

★ 10. 15 — 11. 15மணி, சாவற்கட்டு மகாத்மா சன சமூகநிலையம்

★ காலை 11. 30—12. 45 மணி உதயதாரகை சனசமூக நிலையம், ஆனைக்கோட்டை

★ பிற்பகல் 1. 15 — 2.30 மணி திருவள்ளுவர் சனசமூக நிலையம், ஆனைக்கோட்டை

24 ஆம் திகதி புதன்கிழமை-மானிப்பாய் பொதுச் சுகாதாரப் பிரிவு:-

★ காலை 9 — 10 மணி, பாரதி சனசமூகநிலையம், மானிப்பாய் கிழக்கு

★ முற்பகல் 10. 15 — 11. 15 மணி உச்சியோடை வளர்மதி சனசமூகநிலையம்

★ பகல் 11. 30 — 12. 30 மணி சுட்டுடை சனசமூக நிலையம்

★ பிற்பகல் 12. 45—1.45 மணி செல்லமுத்து விளையாட்டு அரங்கு

★பிற்பகல் 2. 00—3. 00 மணி மத்திய மருந்தகம், மானிப்பாய்.

(ம- 185)

## பணிப்பாளர்களின் முன் அனுமதியின்றி
# நீண்டகால லீவில் நிற்கும் ஆசிரியர்கள் மீது நடவடிக்கை
## அதிபர்கள் மூலம் விவரம் திரட்டல்

யாழ்ப்பாணம், ஒக்.18

வலயக் கல்விப்பணிப்பாளர்களின் முன்அனுமதி இன்றி நீண்டகால லீவில் நிற்கும் ஆசிரியர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

சுகவீனம், பிரசவம் முதலிய மருத்துவ காரணம் இன்றி நீண்டகால லீவில் நிற்கும் ஆசிரியர்களின் சம்பளக் கொடுப்பனவுகளை உடனடியாக நிறுத்தி அவர்கள் தொடர்பான பூரணமான அறிக்கையைச் சமர்ப்பிக்குமாறு பாடசாலை அதிபர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

பொருத்தமான முன் அறிவிப்பு மற்றும் வலயக் கல்விப் பணிப்பாளர்களின் முன் அனுமதி இன்றி நீண்டகாலம் ஆசிரியர்கள் லீவில் இருப்பதும்; நீண்டகால லீவில் நிற்கும் காலப்பகுதியில் இரண்டு மாதங்களுக்கான சம்பளக் கொடுப்பனவை 'டி' படிவம் மூலம் அதிகாரம் அளிக்கப்பட்டவர்கள் பெற்றுக்கொள்வதும் கண்டுபிடிக்கப்பட்டதை அடுத்து அனுமதி இன்றி நீண்டகால லீவில் நிற்கும் ஆசிரியர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படவிருப்பதாகக் கூறப்படுகின்றது.

நீண்டகால லீவில் நிற்கும் ஆசிரியர்களின் பூரண விவரங்கள் உள்ளடங்கிய அறிக்கையை அதிபர்கள் மூலம் வலயக்கல்வி அலுவலகங்கள் திரட்டி வருகின்றன.

(சு-11)



ஈராண்டு நிறைவு நினைவஞ்சலி

மண்ணில் 11 — 06 — 1936

விண்ணில் 09 — 11 — 1999

அமரர்
## பழனிப்பிள்ளை இராஜமாணிக்கம்

திதி: துதியை 18-10-2001

தரணியில் மேன்மைத் தலைநிமிர வைத்து
தந்தையே நித்தம் உந்தன்
ஈராண்டென்ன... இருநூறு நினைவுதான்
ஈரவிழிகளுடன் இறைஞ்சுவோம்
உந்தன் ஆத்ம சாந்திக்காய்.
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

**மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

''குற்றாலம்'',
நக்கீரன் வீதி,
அல்வாய் வடக்கு, அல்வாய்.

(93503)

## வீதி புனரமைப்பு

சுழிபுரம், ஒக். 18

மானிப்பாய் - காரைநகர் பிரதான வீதியின் பண்ணாகம் விசவத்தனையிலிருந்து சுழிபுரம் வரை கார்ப்பெற் இடப்பட்டுச் செப்பனிடும் வேலை நடைபெற்று வருகின்றது.

(சு-28)

## அதிபர்கள் கூட்டம்

குருநகர், செப். 18

யாழ். கல்வி வலயப் பாடசாலை அதிபர்களுக்கான கூட்டம் நாளை வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு யாழ். கல்வி வலய மாநாட்டு மண்டபத்தில் யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி செ மகாலிங்கம் தலைமையில் நடைபெறும்.

(சு-51)

## வேட்பாளர் தெரிவு பொ. ஐ. முன்னணி மும்முரம்

கொழும்பு, ஒக். 18

எதிர்வரும் பொதுத்தேர்தலில்ஒவ்வொரு மாவட்டங்களிலும் போட்டியிடவுள்ளதமது வேட்பாளர்களை தெரிவு செய்யும் பணியைபொ. ஐ. முன்னணி மும்முரமாக மேற்கொண்டு வருகிறது என அமைச்சர் டி. எம் ஜயரத்ன தெரிவித்துள்ளார்.

இன்னும் சில தினங்களில் இந்தப் பணி முடிவடைந்துவிடும். அதன்பின்னர் ஏனைய கட்சிகளுடன் பேச்சுக்கள் நடத்தித்தேர்தல் நடவடிக்கைகளைத் திட்டமிடவிருப்பதாகவும் அவர் கூறினார்.

## வாராந்த நிகழ்வு

யாழ்ப்பாணம், ஒக். 18

சந்நிதியான் ஆச்சிரமசைவ கலை பண்பாட்டுப் பேரவையினர் சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் நடத்திவரும் வாராந்த வெள்ளி நிகழ்வில் இவ்வார நிகழ்வாக 'கடவுள் வடிவங்கள்' எனும் பொருளில் வட்டுக்கோட்டை யாழ். கல்லூரி விரிவுரையாளர் அ. குமாரவேலின் சொற்பொழிவு இடம்பெறும். அறிமுக நிகழ்வுக்குரிய அறிமுக உரையை அதே கல்லூரி விரிவுரையாளர் பொ. அருந்தவநாதன் நிகழ்த்த உள்ளார்.

(சு)

## இடைக்கால தடை உத்தரவு

கொழும்பு, ஒக். 18

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் நடவடிக்கைகளில் தலையிடுவதற்கு முன்னாள் பிரதி அமைச்சர் எம். எல். ஏ. எம். ஹிஸ்புல்லா உட்பட 8 பேருக்கு இடைக்காலத் தடை உத்தரவை கொழும்பு மாவட்ட நீதிமன்றம் நேற்று முன்தினம் பிறப்பித்துள்ளது.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தாக்கல் செய்த மனுமீதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. (சு-3-4)

## மாணவருக்கான வழிகாட்டல் வகுப்பு

அரியாலை, ஒக். 18

யாழ். சைவ பரிபாலன சபையின் சைவ இளைஞர் நற்பணி மன்றத்தினரால் இவ்வாண்டு ஜி. சீ. ஈ. சாதாரண தரப் பரீட்சையில் தோற்றவுள்ள மாணவர்களுக்கான சகல பாடங்களுக்குமான வழிகாட்டல் வகுப்பு நாளை மறுதினம்சனிக்கிழமைநாவலர்ஆச்சிரமத்தில் ஆரம்பமாகும்.

இந்த வழிகாட்டல் வகுப்பில் பங்குபற்றும் மாணவர்கள் இன்று வியாழக்கிழமை பதிவுகளை மேற்கொள்ளுமாறு பரிபாலனசபை அறிவித்துள்ளது.

(சு-17)

## செய்முறைப் பரீட்சை

யாழ்ப்பாணம், ஒக்.18

கைதடி விக்னேஸ்வர வித்தியாலயத்தில் ஜி.சீ.ஈ. சாதாரண தரப்பரீட்சைக்கு விண்ணப்பித்து இடம் பெயர்வினால் வேறு பாடசாலைகளில் கல்வி கற்கும் மாணவர்களுக்கான செய்முறைப்பரீட்சைகள் நடைபெறவுள்ளன என்றும் —

இதன்படி எதிர்வரும் 29 ஆம் திகதி திங்கட்கிழமை மனைப்பொருளியலும்,30 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை சங்கீதமும், நவம்பர் மாதம் 1 ஆம் திகதி விவசாயமும் நடைபெறும் என்றும் பாடசாலை அதிபர் ரி. பாலசுந்தரம் தெரிவித்துள்ளார். (சு-ரி)

# சங்கானை நவீன சந்தைக்கு புதிய இரு மாடிக் கட்டடம்
## 20 லட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு

சங்கானை நவீன சந்தைக்கான இரண்டு மாடிக் கட்டடத்தை நிர்மாணிப்பதற்கு 20 லட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக வலி. மேற்குப் பிரதேச சபைத் தலைவர் ந. திரிலோகநாதன் தெரிவித்துள்ளார்.

வலி மேற்குப் பிரதேச சபைப் பிரிவு மக்களின் நன்மை கருதி இந்த நவீன சந்தையை அமைப்பதற்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இந்த நிதியை ஒதுக்கிக் கொடுத்துள்ளதாக திரிலோகநாதன் அனுப்பி வைத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளார்.

இதேவேளை— வலி. மேற்குப் பிரதேச சபையின் எல்லைக்கு உட்பட்ட வட்டுக்கோட்டை, சங்கரத்தை பொதுச் சந்தையைச் சற்றுப் பின்னால் இடம் மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. என்றும் பிரதேச சபைத் தலைவர் குறிப்பிட்டுள்ளார்.

தற்போது பொதுச் சந்தை பொது நூலகத்திற்குச் சமீபமாக இயங்கி வருவதால் வாசகர்களுக்குப் பல்வேறு அசௌகரியங்கள் ஏற்பட்டு வருவது குறித்து சுட்டிக்காட்டப்பட்டதை அடுத்தே தாம் சந்தையை சற்றுத் தொலைவில் இயங்க வைக்க ஏற்பாடு செய்துள்ளதாகவும் திரிலோகநாதன் குறிப்பிட்டிருக்கிறார்.

(சு)

## தேர்தல் நிலைமை குறித்து
# மனிதநேய அமைப்புகள் இன்று கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஒக். 18

மனிதநேய அமைப்புகளின் ஒன்றியத்தின் உறுப்பினர்களுக்கான கலந்துரையாடல் இன்று வியாழக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு நல்லூர் கோயில் வீதியில் உள்ள அரச சார்பற்ற நிறுவனங்களின் இணைப்பு பணிமனையில் நடைபெறவிருக்கிறது.

சமாதானத்துக்கும், நல்லெண்ணத்துக்குமான மக்கள் குழுவின் ஏற்பாட்டில் இந்தக் கலந்துரையாடல் நடைபெறவிருக்கிறது.

பொதுத்தேர்தலில் தமிழ் மக்களின் அபிலாஷைகள், ஐக்கியப்பட்டு ஒரு கொடியின் கீழ் தேர்தலை எதிர்கொள்வதன் அவசியம், மற்றும் மக்கள் மத்தியில் தேர்தல் தொடர்பாக உருவாக்கப்பட வேண்டிய விழிப்புணர்வு என்பன தொடர்பாகப் பொது அமைப்புகளின் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடி வேலைத்திட்டங்களை முன்னெடுக்கும் நோக்குடன் இந்தக் கலந்துரையாடல் ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதால் அதன் முக்கியத்துவம் கருதி பொது அமைப்புகளின் பிரதிநிதிகளையும் அதில் கலந்துகொள்ளுமாறு அழைப்பு விடுக்கப்பட்டிருக்கிறது.

தற்போதைய சூழ்நிலையில் மக்களின் அபிலாஷைகளின் படியே அரசியல்வாதிகள் நடக்கவேண்டும். அரசியல்வாதிகள் செல்லும் வழியில் மக்கள் பின் தொடரக்கூடாது. எனவே மக்கள் மத்தியில் இதுபற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்தப்படவேண்டும் என்று மனிதநேய அமைப்புகளின் பிரதிநிதி ஒருவர் தெரிவித்தார்.

(ஐ-10)

# இரண்டரை லட்சம் பனம் விதை நடுகைத் திட்டம் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஒக். 18

பனை அபிவிருத்திச் சபையின் பனம்விதை நடுகைத் திட்டத்தின்கீழ் 2 லட்சத்து50 ஆயிரம் விதைகள் நடுகை செய்யும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இத்திட்டத்தின்கீழ் கடந்த வருடம் நடுகைசெய்த விதைகளின் முளைத்திறன் மதிப்பீடு மற்றும் பனை வளத்தின் மதிப்பீடு போன்ற பணிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மழைகாலம் ஆரம்பித்துள்ளமையினால் விரைவாக நடுகை வேலைகள் முன்னெடுத்துச் செல்லப்படுவதாகவும், இப்பணிகள் விரைவில் முடிவடைந்துவிடும் என்றும் பனை அபிவிருத்திச்சபை பொது முகாமையாளர் தம்பிக்கை தெரிவித்தார்.

இதேவேளை இத் திட்டத்தின்கீழ் சாவகச்சேரி, பளை போன்ற பிரதேசங்களில் நடுகைத்திட்டம் மேற்கொள்வதற்குத் திட்டமிடப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

(சு-9)

## வலி. கிழக்குப் பிரதேச சபை ஏற்பாட்டில்
# உரும்பிராயில் தையல் வகுப்பு இன்று ஆரம்ப வைபவம்

வலி. கிழக்கு, ஒக். 18

வலிகாமம் கிழக்குப் பிரதேச சபை உரும்பிராய் உப அலுவலகப் பிரிவில் இலவசத் தையல் பயிற்சி வகுப்பு இன்று வியாழக்கிழமை காலை 10 மணிக்கு ஆரம்பித்து வைக்கப்படும்.

இந்த நிகழ்வுக்குப் பிரதம விருந்தினர்களாகநல்லூர்ப்பிரதேச சபைத் தலைவர் க.மணி பல்லவராஜன், வலி.மேற்குப் பிரதேசசபைத் தலைவர் ந. திரிலோகநாதன் ஆகியோரும் சிறப்புவிருந்தினர்களாக வலி. கிழக்குப் பிரதேச செயலர் க, கேதீஸ்வரன், யாழ். உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ரி. வி. கிருஷ்ணசாமி, கோப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி செ. இந்திரராசா, வலி. கிழக்குப்பிரதேச சபையின் உபதலைவர் ஏ.ரவி ஆகியோரும் கலந்துகொள்வர்.

இந்தப் பகுதியில் வறுமைக்கோட்டின் கீழ் உள்ள பெண்களின் சுய தொழிலை ஊக்குவிக்கும் பொருட்டே வலி. கிழக்குப் பிரதேச சபை 5 புதிய தையல் இயந்திரங்களை வழங்கி தையற் பயிற்சி வகுப்பை ஆரம்பித்து வைக்கின்றது

இதேவேளை புத்தூர் உப அலுவலகப் பகுதியிலும் இலவச தையற் பயிற்சி வகுப்பு கடந்தமாதம் ஆரம்பிக்கப்பட்டு 50 பெண்கள் பயன் பெற்று வருகின்றனர்.

(சு-180)

## உதயன்

### அரச பயங்கரவாதம்

ஆப்கானிஸ்தான் தலைநகர் காபூலில் அமைந்திருந்த செஞ்சிலுவைச் சர்வதேக் குழுவின் களஞ்சியப் பணிமனை மீது விமானத் தாக்குதல் நடத்தப்பட்டிருக்கிறது. இதனால் தனது பணியாளர் ஒருவர் பலத்த காயமடைந்து உயிருக்காகப் போராடிக் கொண்டிருப்பதாகவும் -

அங்கு சேகரித்து வைக்கப்பட்டிருந்த அவசர மனிதாபிமானப் பணிகளுக்கான உபகரணங்களும், உணவுப் பொருள்களும் முற்றாக அழிந்து போனதாகவும் -

செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு அறிவித்திருக்கிறது.

வளாகத்தில் அமைந்திருந்த சகல கட்டடங்கள் மீதும் வானில் இருந்து பார்க்கும் போது நன்கு தெளிவாகத் தெரியக் கூடியவாறு பிரமாண்டமான முறையில் செஞ்சிலுவை அடையாளங்கள் பொறிக்கப்பட்டிருந்த போதும் தனது பணிமனை நேரடியாக இலக்கு வைக்கப்பட்டிருப்பதாக செஞ்சிலுவைக் குழு குற்றஞ் சாட்டியிருக்கிறது.

இத் தாக்குதல் தொடர்பாக அமெரிக்கா உடனடியாகக் கருத்துத் தெரிவிக்கவில்லை.

பயங்கரவாதத்துக்கு எதிரான போர் எனக் கூறிக் கொண்டு ஆப்கானிஸ்தான் மீது அமெரிக்கா தன்னிச்சையாகத் தொடுத்திருக்கும் போரில் சர்வதேச சட்டங்களும் மனிதாபிமான விதிகளும் பரந்த அளவில் மீறப்பட்டு, அதனால் அப்பாவி மக்களுக்கு அழிவுகள் ஏற்பட்டு வருவதாக உலகளவில் கவலைகள் அதிகரித்து வரும் நிலையில் -

போரினாலும் உள்நாட்டு மோதல்களினாலும் பாதிக்கப்பட்ட நாடுகளில் சர்வதேச சட்டங்களை - ஜெனீவா உடன்படிக்கையை - அனுசரித்து மிகப்பெரிய அளவில் மனிதாபிமானப் பணிகளை மேற்கொண்டுவரும் மிக முக்கியமான தொண்டு நிறுவனம் ஒன்றின் பணிமனை அங்கு தாக்குதலுக்கு இலக்காகியிருக்கிறது.

போர், அது ஆப்கானிஸ்தானில் நடந்தாலும் காஷ்மீரில் நடந்தாலும் இலங்கையில் நடந்தாலும் அதற்கு ஒரே முகம்தான். அதுதான் அழிவு.

கடந்த செப்ரெம்பர் 11 ஆம் திகதி அமெரிக்காவின் பென்ரகன் மீதும் உலக வர்த்தக மையக் கட்டடங்கள் மீதும் பெரிய அளவில் நடத்தப்பட்ட விமானத் தற்கொலைத் தாக்குதல்களல் பல்லாயிரக்கணக்கில் அப்பாவி மனித உயிர்கள் காவுகொள்ளப்பட்டமை மிகப் பாதாபத்துக்கும் வேதனைக்கும் உரியதுதான். ஆனால அந்தப் பயங்கரவாதத் தாக்குதலுக்குப் பதிலடியாக தற்சமயம் ஆப்கானிஸ்தான் மீது நடத்தப்பட்டுவரும் போரில் எதுவுமறியாத அப்பாவி ஆப்கான் மக்கள் கொல்லப்பட்டும் இடம்பெயர்ந்தும் பெரும் அவலத்துக்கு உள்ளாகியிருக்கின்றனர்.

தனது நாட்டுப் பிரஜைகள் கொல்லப்பட்டபோது அதைப் பயங்கரவாதம் என்று கூறிக் கூக்குரலிடும் அமெரிக்கா, அதற்காக உலகின் இன்னொரு பகுதியில் நூற்றுக்கணக்கான அப்பாவி மக்களைக் கொன்று குவிப்பது பயங்கரவாதம் ஆகாதா?

சர்வதேச சட்டங்கள் குறித்தும், மனித உரிமைகள் பற்றியும் உலகத்துக்கு இடித்துரைத்து வரும் அமெரிக்காவும் அதன் நேச அணிகளும் ஆப்கானிஸ்தானில் சிவிலியன் இலக்குகள் மீதும் செஞ்சிலுவை போன்ற தொண்டு நிறுவனங்கள் மீதும் குண்டுமழை பொழியப்படுவதை இருட்டடிப்புச் செய்துவருகின்றன.

வடக்கு - கிழக்கில் கடந்த இரு தசாப்த காலமாகத் தொடரும் போரில் ஸ்ரீலங்காப் படைகள் சர்வதேச மனிதாபிமானச் சட்ட விதிகளை அப்பட்டமாக மீறி, பாடசாலைகள், மருத்துவமனைகள், ஆலயங்கள், மக்கள் வாழ்விடங்கள் மீது கண்மூடித்தனமான குண்டுத் தாக்குதல்களை நடத்தி பெரும் அழிவுகளை ஏற்படுத்தியமை வரலாற்று நிகழ்வுகள். ஆனால் அரசுப் படைகளின் இந்த அப்பட்டமான அத்துமீறல்கள் குறித்து இந்த நாடுகள் ஒரு போதும் பெரியளவில் கண்டனங்களை வெளியிட்டதில்லை. மாறாக அவற்றைக் கண்டும்காணாதது போலவே நடந்து வந்திருக்கின்றன.

தங்கள் சுய இருப்பையும், அடையாளங்களையும் காப்பாற்றிக் கொள்வதற்காக உலகெங்கும் உரிமைப் போராட்டங்களை நடத்திவரும் அமைப்புகளுக்கு பயங்கரவாத முத்திரை குத்தி, அவற்றைத் தடை செய்தும் அவற்றின் மீது அழுத்தங்களையும், கட்டுப்பாடுகளையும் விதித்துவரும் அமெரிக்கா அத்தகைய இயக்கங்கள்மீதும் அவை சார்ந்த மக்கள் குழுக்கள் மீதும் கட்டவிழ்த்து விடப்படும் அரச பயங்கரவாதங்களை நியாயப்படுத்தியே வந்திருக்கிறது.

உள்நாடுகளில் இடம்பெறும் அரச பயங்கரவாதச் செயல்களை நியாயப்படுத்தி வந்த அமெரிக்கா, தற்போது தனது நலனுக்காக அரச பயங்கரவாதத்தை வெளிநாடு ஒன்றின்மீது பிரயோகித்திருக்கிறது.

ஆப்கான் மக்கள் தற்போது 'அமெரிக்காவினதும், அதன் நேச அணிகளினதும் போர்' என்ற வடிவத்தில் புதிய பயங்கரவாத அச்சுறுத்தலையே எதிர்கொள்கின்றனர் என்பது கண்கூடு.

# தேர்தல் கண்காணிப்புப் பணியில் நூற்றுக்கும் அதிக வெளிநாட்டினர்

கொழும்பு,ஒக்.18

தேர்தல் கண்காணிப்புப் பணிகளில் நூற்றுக்கும் அதிகமான வெளிநாட்டுக் கண்காணிப்பாளர்கள் ஈடுபடுத்தப்படவுள்ளதாக அறிவிக்கப்படுகின்றது.

இது தவிர 10 ஆயிரத்திற்கும் அதிகமான உள்நாட்டு தேர்தல் கணகாணிப்பாளர்களையும் ஈடுபடுத்த தனியார் கண்காணிப்பு அமைப்புக்கள் திட்டமிட்டுள்ளன. 'பெப்ரல்' அமைப்பு 50 வெளிநாட்டுக் கண்காணிப்பாளர்களையும் தேர்தல் திணைக்களம் சுமார் 50 கண்காணிப்பாளர்களையும் இலங்கைக்கு அழைக்கவுள்ளன. இது தவிர தேர்தல் வன்முறைகளைக் கண்காணிக்கும் நிலையமும் வெளிநாட்டு கண்காணிப்பாளர்களை அழைப்பது குறித்து ஆராய்ந்து வருகின்றது.

வெளிநாட்டுக் கண்காணிப்பாளர்களை அழைக்குமாறு அரசியல் கட்சிகள் பலவும் கோரி வருவதால் ...ர் 50 வெளிநாட்டுக் கண்காணிப்...களைத் தருவிக்கத் தேர்தல் திணைக்களம் திட்டமிட்டுள்ளதாகத் தேர்தல் திணைக்கள அதிகாரி ஒருவர் கூறினார். எதிர்வரும் தினங்களில் நடைபெறவுள்ள கட்சித் தலைவர்களுடனான கூட்டத்தின்போது இது குறித்துத் தீர்மானிக்கப்படவுள்ளது. (ஐ)

## கிழக்கில் தேடுதல்

மட்டக்களப்பு,ஒக்.18

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள வந்தாறுமூலை, மாவடிவேம்பு பகுதிகள் கடந்த செவ்வாயன்று படையினரால் சுற்றி வளைக்கப்பட்டு தேடுதல் நடத்தப்பட்டுள்ளது.

வீடுகளில் நிரந்தரமாக வசிப்பவர்கள் மற்றும் வேறு இடங்களில் சென்று தங்கியிருப்போரின் விவரங்களைத் திரட்டிய படையினர் ஒவ்வொரு வீடுகளுக்குள்ளும் புகுந்து கடுஞ்சோதனைகளை மேற்கொண்டனர்.

இதேவேளை -

குடும்ப உறுப்பினர்கள் எவராவது புலிகள் இயக்கத்தில் இணைநது கொண்டால் அவர்கள் பற்றி விவரங்களைப் படை முகாம்களில் பதிவு செய்யுமாறும்-

அவ்வாறு பதிவு செய்யத் தவறுவோருக்கு எதிராகக் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் எனவும்-

படையினர் அறிவுறுத்தியுள்ளனர். (ஐ-4)

## தென்மராட்சி மாணவர்களுக்கான சீருடைத் துணி

தென்மராட்சி,ஒக்.18

இவ்வருடத்திற்குரிய இலவச சீருடைத் துணிகள் இதுவரை வழங்கப்படாதுள்ள தென்மராட்சிக் கல்வி வலயத்தைச் சேர்ந்த மாணவர்களுக்கு தற்போது தற்காலிகமாக இணைந்துள்ள வலிகாமம் பகுதிப் பாடசாலைகளின் அதிபர்கள் உடனடியாக உரும்பிராயில உள்ள நாவற்குழி மகா வித்தியாலயத்தில் இயங்கும் கோட்டக் கல்வி அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளுமாறு அல்லது கல்வி பயிலும் மாணவரின் பெற்றோர் ஒருவருக்கு அதிகார கடிதம் கொடுத்து சீருடைத் துணியைப் பெற்று விநியோகிக்குமாறும் வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா அறிவித்துள்ளார். (க-117)

## நாட்டு நடப்பு

புலமைப்பரிசில் பெற்று விட்டால்
புழுகிறீர் ஒன்று கூடி
சில பெற்றோர் மகிழ்ச்சி பொங்க
சிறப்புற விழாவும் காண்பார்
இருநூறு பெறவேண்டு மன்றோ
இங்குபெற்றதோ நூற்றெழுபத்தெட்டுதானே
இருபத்திரண்டை ஏன் விட்டா யென்று
இடர் படுவாரைக் காணோம்!
அருகுது யாழ்ப்பாணக் கல்வியென்று
அழுவாரை எங்கும் காணேன்!

- *விகடகவி.*

# புரிந்துணர்வு உடன்படிக்கையின் கதி என்ன? தேர்தல் முடிந்த பின்னரே ஜே.வி.பி. அறிவிக்கும்

கொழும்பு,ஒக்.18

பொதுமக்கள் ஐக்கிய முன்னணியுடன் செய்துகொள்ளப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கையைத் தொடர்வதா, இல்லையா என்பது குறித்து தேர்தலின் பின்னரே முடிவு எடுக்கப்படும் என்று ஜே.வி.பி. தரப்பில் கூறப்பட்டிருப்பதாகத் தெரிய வருகிறது.

கடந்த செவ்வாய்க்கிழமை ஜனாதிபதி மாளிகையில் ஜே.வி.பி.தலைவர்கள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவுடன் நடத்திய பேச்சுவார்த்தைகளின்போது தேர்தல் கூட்டுச் சம்பந்தமாக எந்தவொரு தரப்பினருமே யோசனை எதனையும் முன்வைக்கவில்லை என்று தெரியவருகிறது.

தனித்துப் போட்டியிடுவதென்ற ஜே.வி.பியின் நிலைப்பாட்டில் மாற்றம் எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை. ஆனால் எச்சந்தர்ப்பத்திலும் ஐ.தே.கவுக்கு ஆதரவளிக்கப் போவதில்லை என்று ஜனாதிபதியிடம் பேச்சுவார்த்தையின்போது ஜே.வி.பி. தலைவர்கள் கூறியிருக்கிறார்கள் என்று அறியவருகிறது. ஜனாதிபதியுடனான பேச்சுவார்த்தைகளின்போது பிரதமர் ரத்னசிறி விக்கிரமநாயக்க. அமைச்சர்கள் டி.எம். ஜயரத்ன, மங்களசமரவீர, நிமால் சிறிபால டி சில்வா ஆகியோரும் ஜே.வி.பி. தரப்பில் அதன பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா, பிரசாரச் செயலாளர் விமல் வீரவன்ஸ, நந்தன குணதிலக ஆகியோர் கலந்துகொண்டனர்.

ஜனாதிபதியின் அழைப்பின்பேரில் அவரைச் சந்தித்த பின்னர் விமல் வீரவன்ஸ கட்சியின் சார்பில் அறிக்கை ஒன்றை விடுத்துள்ளார். அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

கலைக்கப்பட்ட நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட 17 ஆவது அரசமைப்புத் திருத்தத் தையடுத்து அமையவிருந்த அரசமைப்புச் சபையை மீண்டும் ஸ்தாபிப்பது தொடர்பாக ஜனாதிபதியுடன் ஆராயப்பட்டது.

தேர்தற்காலங்களில் இடம்பெறக் கூடிய வன்செயல்களைத் தடுப்பதற்காக சகல அரசியற்கட்சிகளுடனும் பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டு தடுப்பதற்கான வியூகங்களை அமைக்க வேண்டுமென்றும் அரசிடம் கோரப்பட்டுள்ளது. (க)

## சாயிசிந்தனை



### மனித மேம்பாருகளைப் பற்றி தீவிரமாக ஆராய்ந்தறிய வேண்டும்

மனித உடலின் மதிப்பை அறிவது மிகவும் அவசியம். தனக்குள் இருக்கும் தெய்வத் தன்மையை போற்றிப் பாதுகாத்து வைப்பது உடலேயாகும். மனித உடல் இரும்புப் பெட்டி போன்றது. இதற்கு மதிப்பில்லை. இரும்புப்பெட்டிக்குள் வைரங்களை வைத்து பாதுகாப்பது போல, இவ்வுடலுக்குள் தெய்வீகம் பாதுகாக்கப்படுகிறது.

இவ்வுடலினுள் வைரங்கள் போன்ற நன்னடத்தை, நல்ல உணர்ச்சிகள், நல்ல எண்ணங்கள், நல்ல சிந்தனைகள் போன்றவை உறைந்திருக்கின்றன.

இந்தப் புனித குணங்கள் உன்னை விட்டு விலகினால், அவற்றை மறுபடியும் பெற இயலாது. இந்த நற்குணங்களால் தான் மனித வாழ்க்கைக்கே மதிப்பு ஏற்படுகிறது. மனித வாழ்க்கை தயை, பிரேமை, பொறுமை, தியாக உணர்வு (சேவை) இவற்றால்தான் நன்மதிப்புப் பெறுகிறது. இக்கால மனிதனால் மனித மேம்பாடுகளின் மதிப்பை உணர்ந்து கொள்ள இயலவில்லை.

வாழ்க்கை என்ற நீண்ட பயணத்தில் உடல் வெறும் கருவி. இத்தகைய வலுவான கருவியைச் சரியாகப் பயன்படுத்தாவிடில், வழியில் மிகவும் துன்பப்படுவோம். ஆகவே நாம் மனித மேம்பாடுகளைப் பற்றி தீவிரமாக ஆராய்ந்தறிய வேண்டும்.

(ஆதாரம்: பிருந்தாவனத்தில் கோடை மழை)

## உலக உளநல நாள் - ஒக்ரோபர் 10

2001ஆம் ஆண்டின் கருப்பொருள்

*'வேலைப்பளுவும் உளநலனும்'*

செயலாற்றலை அளவீடு செய்து உள நலனை மேம்படுத்தலாம்.

# ஐ.தே.கட்சி வேட்பாளர் தெரிவுக்கு ரணில் தலைமையில் குழு!

கொழும்பு,ஒக்.18

எதிர்வரும் பொதுத்தேர்தலில் ஐ.தே.கட்சியின் சார்பாக போட்டியிடும் வேட்பாளர்களைத் தெரிவு செய்வதற்காக அந்தக்கட்சி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான குழு ஒன்றை நியமித்துள்ளது.

ஐ.தே.கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க பிரதித்தலைவர் கரு ஜய ஆரிய, உபதலைவர் காமினி அத்துர் கோறளை ஆகியோர் உள்ளடக்கிய இந்தக் குழு இவ்வார இறுதிக்குள் தமது சகல வேட்பாளர்களையும் தெரிவுசெய்துவிடும் என்று ஐ.தே.கட்சி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ள கட்சியின் தேசிய ம்மாநாட்டுக்கு முன்னர் வேட்பாளர்களைத் தெரிவு செய்யும் பணி முடிவடைந்து விடும் என அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. (க-4)

புதிய செம்மணி வீதியில் இயங்கும்

# கள்ளுத் தவறணையை அகற்றுமாறு கோரிக்கை

யாழ்ப்பாணம்,ஒக்.18

நல்லூர் வடக்கு மற்றும் இருபாலை தெற்கு பிரதேசங்களை உள்ளடக்கிய கல்வியங்காடு, புதிய செம்மணி வீதிப் பகுதியில் அமைந்துள்ள கள்ளுத் தவறணையை அங்கிருந்து வேறிடத்துக்கு மாற்றுமாறு கோரி அப்பகுதி மக்கள் மகஜர் ஒன்றை பிரதேச சபையிடமும், அரச அதிகாரிகளிடமும் கையளித்திருக்கின்றனர்.

இப்பிரதேசத்தில் பாடசாலைகள், ஆலயங்கள், மக்கள் குடியிருப்புகளுக்கு மத்தியில் இயங்கும் இந்தக் கள்ளுத் தவறணையால் பல்வேறு அசௌகரியங்களுக்கும் சமூக ரீதியான பாதிப்புகளும் எதிர்நோக்கப்படுவதாகவும் -

இதனால் அந்தக் கள்ளுத் தவறணையை வேறிடத்துக்கு மாற்றுமாறும் மகஜரில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இப்பிரதேசத்தைச் சேர்ந்த ஐம்பதுக்கு மேற்பட்டோர் அந்த மகஜரில் கையொப்பமிட்டிருக்கின்றனர்.

இந்தக் கோரிக்கை தொடர்பாக உரிய நடவடிக்கை எடுப்பதாக பிரதேச சபை அதிகாரிகள் தெரிவித்திருக்கின்றனர். (ஐ)

## நாளை

ஐப்பசி 02
வெள்ளிக்கிழமை
திதி : திருதியை
முன்னிரவு 9.44 வரை.
நட்ஷத்திரம் : விசாகம்
பிற்பகல் 1.12 வரை.
மரணயோகம்
சுபநேரம் : 6.02 - 7.32
ராகுகாலம் : 10.32 - 12.02
(பழைய நேரப்படி)

## உதயவாக்கு

எது எது எனக்குத் தெரியாதோ அதனைக் கேட்க நான் நாணுவதில்லை. அதுவே நான் அறிவுபெற்ற முறையாகும்.

## கண்ணிகள் காத்திருக்கின்றன, கவனம்!



## மலிவு விற்பனை

கிறிஸ்து பிறப்புப் பெருவிழா
நெருங்கிக் கொண்டிருக்கும் வேளையில்....

பாடசாலை ஒளிவிழாக்கள் பங்கு ஒளிவிழாக்களில் மேடையேற்றவும், அன்பளிப்புக்களாக வழங்கவும் ஏற்ற

**பைபிள் கதைகளை உள்ளடக்கிய திருமறை நாடக, கூத்து நூல்கள்**

☆ அனைத்தும் மலிவு விலையில் ☆

சொற்ப பிரதிகளே உள்ளதால் முந்திக்கொள்ளுங்கள்.

**விற்பனைக் காலம்**

*20.10.2001 சனி முதல் 30.10.2001 செவ்வாய் வரை*

விரைந்து வாருங்கள்.......

மன்ற அலுவலகத்துக்கு......

☆ கலைமுகம் (கலை, இலக்கிய இதழ்)

☆ ஆற்றுகை (நாடக, அரங்கியலுக்கான இதழ்)

மற்றும்

ஏனைய இலக்கிய நூல்கள், ஒலிப்பதிவு நாடாக்கள் என்பனவும் விற்பனை செய்யப்படும்.

**திருமறைக் கலாமன்றம்**

238, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 021-2393. (C/18733)


## முக்கியஅறிவித்தல்

கூட்டுறவுச் சங்கங்களின் சட்டவிதி 18 (1)ன் கீழ்
யாழ்.மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின்

**விசேட பொதுக்கூட்ட அறிவித்தல் - 2001.10.20**

யாழ். கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் அவர்களின் யா/கூ/அ/1639 இலக்கம் கொண்டதும் 2001.09.26ஆம் திகதிய கடிதத்தின் பிரகாரம் கூட்டுறவுச் சங்க சட்டவிதி 18(1)ன் கீழ் அளிக்கப்பட்ட அதிகாரத்தின்படி திரு.நாகலிங்கம் தவநாதன் தலைமைக் காரியாலய கூட்டுறவுப் பரிசோதகர், கூட்டுறவு அலுவலகம், யாழ்ப்பாணம் ஆகிய என்னால் யாழ்.மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் பொதுக்கூட்டம் ஒன்று அழைக்கப்படுகிறது. கூட்டம் எனது தலைமையில் நடைபெறும்.

*இடம்:* பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை
கலாசாலை வீதி, திருநெல்வேலி.

*காலம்:* 2001-10-20 சனிக்கிழமை

*நேரம்:* மு.ப. 10.00 மணி (புதிய நேரம்)

### நிகழ்ச்சி நிரல்

★ இறைவணக்கம்
★ தலைமை உரை
★ புதிய துணைவிதி அங்கீகரித்தல்
★ நன்றியுரை

மேற்படி சங்கத்தின் வாக்களிக்கத் தகைமை பெற்ற உறுப்பினர்கள் யாவரும் தவறாது சமுகமளிக்குமாறு தயவுடன் கேட்டுக்கொள்கின்றேன்.

குறிப்பு: இக்கூட்டம் சம்பந்தமான மேலதிக விவரங்களை 04.10.2001இல் பிரசுரிக்கப்பட்ட உதயன் பத்திரிகையில் பார்வையிடலாம்.

கூட்டுறவு அலுவலகம்,
இல.857,கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.
2001.10.15 (C/18728)

நா.தவநாதன்,
தலைமைக் காரியாலயக்
கூட்டுறவுப் பரிசோதகர்.

## நெஞ்சை விட்டகலாத
## 4ஆம் ஆண்டு நினைவலைகள்



தோற்றம் 01 - 06 - 1940

மறைவு 03 - 10 - 1997

### அமரர் திருநாவுக்கரசு தருமலிங்கம்

திதி:18.10.2001

எத்தனை ஆண்டுகள் சென்றாலும்
எங்கள் நெஞ்சம் உங்களை மறந்திடுமோ?
நித்தமும் உங்களை எண்ணி
சித்தம் கலங்கி தவிக்கின்றோம்...
உங்கள் ஆத்ம சாந்திக்காய் - நாளும்
இறைவனை நாடி நிற்கின்றோம்.

ஓம் சாந்தி!

யாழ்ப்பாணம். (93522)

பிரிவால் துயருறும்:
குடும்பத்தினர்.

# வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை

## மானிப்பாய் - "ரான் நிதி ஒதுக்கீடு - 2001"

**வடக்கு புனர்வாழ்வு, புனரமைப்பு, வடக்கு - கிழக்கு தமிழ் விவகாரங்கள், இந்து கலாசார அமைச்சர் மாண்புமிகு கே.என்.டக்ளஸ் தேவானந்தா அவர்கள் எமது பிரதேச வளர்ச்சி அபிவிருத்தி கருதி இவ்வருடம் உடன் செய்துமுடிக்க வேண்டிய வேலைகளுக்காக ரூபா 17,800,000.00 ஐ (ஒரு கோடியே 78 லட்சம் ரூபா) ஒதுக்கித்தந்துள்ளார்.**

| இல. | நிறுவனம் | ஒதுக்கீடு |
|---|---|---|
| (01) | ஸ்ரீ ஊத்துங்க விநாயகர் ஆலய பரிபாலன சபை ஆனைக்கோட்டை, உயரப்புலம். | 200,000.00 |
| (02) | இரட்டையர்புலம் ஞானவைரவர் தேவஸ்தானம், சண்டிலிப்பாய். | 125,000.00 |
| (03) | சுதுமலை ஈஞ்சடி ஞானவைரவர் தேவஸ்தானம். | 150,000.00 |
| (04) | ஆலடி வைரவர் தர்மகர்த்தா சபை. | 75,000.00 |
| (05) | அரசடி சித்தி விநாயகர் ஆலயம், மாதகல் | 300,000.00 |
| (06) | ஞானசிந்தாமனி பிள்ளையார் தேவஸ்தானம் திருப்பணிச்சபை, காஞ்சிபுரம், மாதகல் | 300,000.00 |
| (07) | அந்திரான் முருகமூர்த்தி கோவில் பரிபாலனசபை, நவாலி. | 75,000.00 |
| (08) | அந்திக்குளி ஸ்ரீ ஞானவைரவர் ஆலய பரிபாலனசபை, சாவற்கட்டு, ஆனைக்கோட்டை. | 350,000.00 |
| (09) | இராச இராசேஸ்வரி அம்பாள் ஆலயம், சண்டிலிப்பாய் கிழக்கு, சண்டிலிப்பாய். | 150,000.00 |
| (10) | கல்வளைப்பிள்ளையார் கோவில் தர்மகர்த்தா சபை, சண்டிலிப்பாய். | 200,000.00 |
| (11) | ஸ்ரீ அண்ணமகேஸ்வரர் தேவஸ்தானம் பரிபாலனசபை, மணலடைப்பு, இளவாலை. | 100,000.00 |
| (12) | கெங்காதேவி ஆலய பரிபாலனசபை, சாவற்கட்டு. | 150,000.00 |
| (13) | காசிகாண்டமடம் சிவன்கோவில், சோமசுந்தரம் வீதி, ஆனைக்கோட்டை. | 300,000.00 |
| (14) | புனித செபஸ்தியார் ஆலயம், மாதகல் | 100,000.00 |
| (15) | மாகியம்பதி புனித செபஸ்தியார் ஆலய பரிபாலன சபை, அளவெட்டி மேற்கு, அளவெட்டி | 300,000.00 |
| (16) | மீட்பின் குரல் கிறிஸ்தவ தொடர்பு நிலையம். | 300,000.00 |
| (17) | அடைக்கல மாதா ஆலயம், ஆனைக்கோட்டை. | 300,000.00 |
| (18) | புனித சகாய மாதா ஆலயம், சகாயபுரம், மாதகல். | 200,000.00 |
| (19) | ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் தேவஸ்தானம், சண்டிலிப்பாய். | 400,000.00 |
| (20) | புனித யூதாததேயு ஆலயம், பங்குத் தந்தை, இளவாலை. | 200,000.00 |
| (21) | சாயிமயம் எங்கும் சாந்திமயம், சுதுமலை வடக்கு, மானிப்பாய். | 200,000.00 |
| (22) | ஸ்ரீ விசாலட்சி அம்பாள் சமேத ஸ்ரீ விஸ்வநாத சுவாமி கோயில், சுதுமலை, மானிப்பாய் | 200,000.00 |
| (23) | யா/இளவாலை றோ.க.த.ஆண்கள் பாடசாலை. | 200,000.00 |
| (24) | யா/மாரீசன்கூடல் சுப்பிரமணிய வித்தியாலயம், இளவாலை. | 200,000.00 |
| (25) | யா/பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரி, பண்டத்தரிப்பு. | 700,000.00 |
| (26) | யா/மானிப்பாய் சென். ஆன்ஸ் றோ.க.த.க.பாடசாலை. | 500,000.00 |
| (27) | யா/சண்டிலிப்பாய் வடக்கு த.க.பாடசாலை. | 250,000.00 |
| (28) | யா/கட்டுடை சைவ வித்தியாசாலை, மானிப்பாய். | 200,000.00 |
| (29) | யா/சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி. | 1,000,000.00 |
| (30) | யா/ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாலயம். | 500,000.00 |
| (31) | யா/மானிப்பாய் மகளிர் கல்லூரி | 1,000,000.00 |
| (32) | யா/மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை. | 600,000.00 |
| (33) | யா/பெரியவிளான் றோ.க.த.க.பாடசாலை இளவாலை. | 300,000.00 |
| (34) | யா/பண்டத்தரிப்பு பரிஷ் ப.நோ.கூ.சங்கம் | 1,000,000.00 |
| (35) | வளர்மதி ச.ச.நிலையம் பாலர் பாடசாலை, மானிப்பாய் வடக்கு, மானிப்பாய் | 250,000.00 |
| (36) | மகாஜனா சனசமூக நிலையம், ஆனைக்கோட்டை. | 100,000.00 |
| (37) | ஐங்கரன் ச.ச.நிலையம் (கலாசார மண்டபம்) | 500,000.00 |
| (38) | இலங்கை மின்சார சபை - ஆலங்குழாய் மின் விநியோகம். | 500,000.00 |
| (39) | யுவசக்தி ச.ச.நிலையம். | 150,000.00 |
| (40) | சுதுமலை மத்திய சனசமூக நிலையம், வாசிகசாலையும், சுதுமலை தெற்கு, மானிப்பாய். | 150,000.00 |
| (41) | திருவள்ளுவர் ச.ச.நிலையம் மானிப்பாய் மேற்கு. | 100,000.00 |
| (42) | கலைவாணி ச.ச.நிலையம், வடலியடைப்பு, பண்டத்தரிப்பு. | 50,000.00 |
| (43) | ஸ்ரீ அம்பாள் ச.ச.நிலையம், மாகியம்பதி, சண்டிலிப்பாய் வடக்கு. | 50,000.00 |
| (44) | நாவலர் ச.ச.நிலையம், சுதுமலை வடக்கு, மானிப்பாய். | 60,000.00 |
| (45) | பாரதி ச.ச.நிலையம், மானிப்பாய். | 100,000.00 |
| (46) | பழனியானந்தன் ச.ச.நிலையம், சித்திரமேழி, இளவாலை. | 75,000.00 |
| (47) | நவாலி வடக்கு ச.ச.நிலையம், மானிப்பாய். | 100,000.00 |
| (48) | காந்திஜி ச.ச.நிலையம், அம்பாள் கோயிலடி, மாதகல். | 50,000.00 |
| (49) | நவாலி சென். பீற்றர்ஸ் ச.ச.நிலையம், நவாலி தெற்கு, மானிப்பாய். | 50,000.00 |
| (50) | மணிமேகன் ச.ச.நிலையம், சண்டிலிப்பாய் மேற்கு. | 75,000.00 |
| (51) | இந்து இளைஞர் ச.ச.நிலையம், இளவாலை. | 150,000.00 |
| (52) | ஐக்கிய ச.ச.நிலையம், உயரப்புலம், ஆனைக்கோட்டை. | 25,000.00 |
| (53) | புனித டொன் பொஸ்கோ ச.ச.நிலையம், புனித யாகப்பர் ஆலயம், இளவாலை. | 100,000.00 |
| (54) | கட்டுடை ச.ச.நிலையம், கட்டுடை, மானிப்பாய். | 100,000.00 |
| (55) | புனித தோமையார் கடற்றொழிலாளர் ச.ச.நிலையம், பிரதான வீதி, மாதகல். | 300,000.00 |
| (56) | கலப்பராகிரி ச.ச.நிலையம், மாரீசன்கூடல், இளவாலை. | 75,000.00 |
| (57) | புனித யூதாததேயு ச.ச.நிலையம் இளவாலை மேற்கு, இளவாலை. | 175,000.00 |
| (58) | சாந்தை சித்திவிநாயகர் ச.ச.நிலையமும், கிராம அபிவிருத்திச் சங்கமும், சாந்தை பண்டத்தரிப்பு | 100,000.00 |
| (59) | வேல்முருகன் ஆலய பரிபாலன சபை. | 200,000.00 |
| (60) | வெள்ள வாய்க்கால் அமைத்தல் (மேலதிக கொடுப்பனவு) | 500,000.00 |
| (61) | சாவற்கட்டு கிராம அபிவிருத்திச் சங்கம், சாவற்கட்டு, ஆனைக்கோட்டை (பின்தங்கிய கிராம மலசல கூடம் அமைத்தல்.) | 500,000.00 |
| (62) | வடலியடைப்பு கிராம அபிவிருத்திச் சங்கம், வடலியடைப்பு, பண்டத்தரிப்பு. | 100,000.00 |
| (63) | வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை, தலைமை அலுவலகம் மானிப்பாய், பொதுச் சந்தை புதிய கட்டடம் அமைத்தல் | 2,000,000.00 |
| | | 17,800,000.00 |

மேற்படி நிதியைப் பெறவுள்ள பின்வரும் நிறுவனங்கள், சபைகள் ஆகியவற்றின் பிரதிநிதிகள் 21.10.2001ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணிக்கு பிரதேச சபை, தலைமை அலுவலகத்தின் ரவீந்திரன் கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ள கூட்டத்தில் சமுகமளிக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

குறிப்பு:-
கடந்த காலத்தில் ரூபா 57 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு நிதி உதவி பெறப்பட்ட நிறுவனப் பிரதிநிதிகளும் உடன் மேற்படி கூட்டத்தில சந்திக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

மக்கள் சேவையிலுள்ள,

**வெலிச்சோர் அன்ரன் ஜோன்சன்,**
ஜே.பி,யூ.எம்.
தலைவர்,
வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை, மானிப்பாய்.

வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை,
தலைமைச் செயலகம்,
மானிப்பாய் (C-18732)

PEOPLE'S BANK

# வடபிராந்திய மக்கள் வங்கியின் இன்னுமொரு மகத்தான சேவை ஆரம்பம்!

அரச கூட்டுத்தாபன ஊழியர்களினதும் பொதுமக்களினதும் நலன்கருதி ஒவ்வொரு சனிக்கிழமையும் **யாழ்.ஸ்ரான்லி வீதி மக்கள் வங்கிக் கிளையில்** *"தங்க நகை அடகு சேவை"* 2001-10-20 சனிக்கிழமை தொடக்கம் மகத்தான ஆரம்பம்.

காலை 9.30 மணிமுதல் பிற்பகல் 1.30 மணிவரை ஒவ்வொரு சனிக்கிழமையும் தங்களுக்கான விசேட அடகு சேவை கருமபீடம் பணிபுரியும்.

வடவலய உதவிப் பொது முகாமையாளர் **திரு.சி.இளம்பிறைநாதன்**
வடபிராந்திய முகாமையாளர் **திரு.மு.க.சிவபாதவிருதயர்**

ஆகியோர்

*இணைந்து 2001.10.20 சனி காலை 9.30 மணிக்கு விசேட கருமபீடத்தை ஆரம்பித்து வைப்பார்கள்.*
*அடகு வைத்துப் பணம் பெறும் எமது இனிய வாடிக்கையாளர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.*

பிரதேச முகாமையாளர்,
மக்கள் வங்கி,
பிரதேச தலைமைச் செயலகம்,
79, கன்னாதிட்டி வீதி,
யாழ்ப்பாணம்.
*தொலைபேசி: 021-2601, 021-2602, 021-2956*
*தொலைநகல்: 021-2602, 021-2956*



# அடகு வைத்தவர்களுக்கு மீண்டும் ஒரு சந்தர்ப்பம்

1984 ஆம் ஆண்டு மார்ச் மாதத்துக்குமுன் வாடிக்கையாளர்கள், மக்கள் வங்கி யாழ். மாவட்டக் கிளைகளில் அடகு வைத்த நகைகள் மீண்டும் மீளளிக்கப்படுகின்றன. எனவே இதுவரை தமது சொத்தான நகைகளை மீட்காதவர்கள் இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி முதலளவு வட்டியை மட்டுமே செலுத்தி மீட்டுக்கொள்ளுங்கள்.

அடகுச் சிட்டை இழந்தவர்கள் 'பத்திரம் ஆ' சத்தியக் கடதாசி சமர்ப்பித்தும், அடகு வைத்தவர்கள் மரணமடைந்திருந்தால் 'பத்திரம் அ' அடகு வைத்த கிளைகளில் சமர்ப்பித்தும் மீட்டுக்கொள்ளுங்கள்.

குறிப்பு:-

*குறித்த நகைகள் 2001-12-31 ஆம் திகதிக்கு முன் மீளத்தவறின் மீளப்படாத நகைகள் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.*

**பிரதேச முகாமையாளர்,**
**மக்கள் வங்கி,**
**பிரதேச தலைமைக காரியாலயம்,**
**79, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.**

**தொலைபேசி:- 021-2601, 021-2602, 021-2956**
**தொலைநகல்:- 021-2602, 021-2956**

(சி18747)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## முட்டை விற்பனைக்கு

எங்களிடம் கோழிமுட்டை, இறால் கருவாடு, நெத்தலிக்கருவாடு, மாசிக் கருவாடு, சிரட்டைக்கரி என்பன விற்பனைக்கு உண்டு. தொடர்பு: ஆ.மல்லிகாராஜா, 149, மின்சார நிலைய வீதி, (பஸ் நிலையம் அருகில்) யாழ்ப்பாணம். (93533)

## கார் விற்பனைக்கு

மிகவும் நல்ல நிலையில் (தனிப் பெற்றோலில்) இயங்கிக் கொண்டிக்கும் மொறிஸ்மைனர் 1000 மொடல் கார் இல.8ஸ்ரீ 6363 விற்பனைக்கு உண்டு. தொடர்பு: ஆ.மல்லிகாராஜா, கூழாவடி, (தபால் நிலையத்துக்கு அருகில்) ஆனைக்கோட்டை.(93534)

## வீடற்றவன்

அராலியூர் ந.சுந்தரம்பிள்ளையின் "வீடற்றவன் நாவலின் விளக்கமும் விமர்சனமும்" ரூபா 25.00. 1. நாடகம் எழுதுவது எப்படி? 2. யாழ்ப்பாணமா? கொழும்பா? 3. யாழ்ப்பாணம் ரூபா 50.00. 4. இலக்கியக் கட்டுரைகள் ரூபா 125.00. (93551)

## (O/L) கணிதம் 2001

ஆரம்ப அறிவேயில்லாதவர்களுக்கும் இதுவரை சித்தியடையாதவர்களுக்கும் 36 வருட அனுபவமுடைய ஆசிரியரினால் 40 மணித்தியாலங்களில் Distinction பெறுபேறடையக் கற்பிக்கப்படும். தொடர்பு: க.ஆறுமுகநாதன், 10, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, சுண்டுக்குளி. (93539)

## வயலின் வகுப்புகள்

பட்டதாரி ஆசிரியைகளால் விஜயதசமி தினத்தன்று வயலின் வகுப்புகள் ஆரம்பிக்கப்படவுள்ளன. தொடர்பு: இல.71/6, அரசடி வீதி, யாழ்ப்பாணம். (யாழ்.இந்து மகளிர் கல்லூரிக்கு அருகில். (C/18750)

## பணிப்பெண் தேவை

டாக்டரின் வீட்டில் வீட்டு வேலைகளைக் கவனிப்பதற்கு ஓரளவு கல்வியறிவுள்ள, குடும்பப்பாங்கான, பண்புள்ள பெண் தேவை. தொடர்பு: Dr.S.V. தங்கராசா, கற்பகப்பிள்ளையார் கோயில் வீதி, உடுவில் கிழக்கு, சுன்னாகம். (C/18701)

## யோகாசன வகுப்புகள்

நல்லூர் பண்டாரக் குளம் லிங்கா துரை இராசா வீட்டில் இயங்கிவந்த யோகாசன வகுப்பு இன்று சாயந்தரம் நாலு மணிக்கு கம்பன் கோட்டத்தில் ஆரம்பமாகும்.

(93535)

Spoken English
and
Written English
Classes
**By:Mr.B.Manoharan**
ஆரம்பம்
**19.10.2001 நாளை 8.00 a.m**
வாரத்தில் 5 நாள்கள்
துரித வகுப்புகள் நடைபெறும்.
**College Of English**
Sannathi Rd, Atchuvely
(93549)

## தொடர்பு கொள்ளவும்

இரண்டு வேப்பமரங்கள் வாங்குவதற்கு என்னுடன் இணங்கிக் கொண்டவர்கள் உடனடியாகத் தொடர்பு கொள்ளவும். தவறின் இரண்டாவது ஒப்பந்தகாரருக்கு மரங்கள் வழங்கப்படும்.

**வே. பரிமேலழகபிள்ளை**
**(சோமுவாத்தியார்)**
**சிறுப்பிட்டி தெற்கு,**
**நீர்வேலி.** (93553)

## யாழ்.மாவட்ட தனியார் பாரவூர்தி உரிமையாளர் கூட்டுறவுச் சங்கம் (வ-து)

09-10-2001ஆம் திகதிய நிர்வாக சபைக் கூட்டத் தீர்மானத்திற்கமைய எதிர்வரும் (30-11-2001) வெள்ளிக்கிழமையிலிருந்து பாரவூர்தி சங்கத்தில் புதிய பாரவூர்திகள் பதிவுசெய்யப்படமாட்டாது என்பதனைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

215, பழைய பூங்கா வீதி,
யாழ்ப்பாணம். (93547)

வீ.குமாரசாமி,
தலைவர்

இ.அரிகரன்
செயலாளர்

## சாவகச்சேரி பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்

(வரையறுக்கப்பட்டது)

## கிளைக்குழுத் தேர்தல் 2001-10-20

மேற்படி சங்கத்தின் கிளைக்குழுத் தேர்தல் எதிர்வரும் (2001-10-20) சனிக்கிழமை மு.ப.10.00 மணிக்கு நடைபெறும். தற்போது செயற்பட்டு வரும் கைதடிச் சந்தி 188, கைதடி மேற்கு 189, கைதடி நுணாவில் 191ஆம கிளைகளுக்கான தேர்தல் கைதடி முத்துக்குமாரசாமி வித்தியாலயத்திலும், கைதடி வடக்கு 190, கைதடி மத்தி 204ஆம் கிளைகளுக்கான தேர்தல் கைதடி மத்தி வளர்மதி சனசமூக நிலையத்திலும், ஏனைய கிளைகளுக்கான தேர்தல் அச்சுவேலி மத்திய கல்லூரியிலும் நடைபெறும். கிளைக்குழுத் தெரிவின்போது தகுதியுள்ள அங்கத்தவர்கள் அனைவரும் தவறாது கலந்துகொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

பங்குபெறும் சகல அங்கத்தவர்களுக்கும் விசேட படி ரூபா நூறு (ரூபா 100/-) வழங்கப்படும்.

நா.சின்னத்துரை
உபதலைவர்.

(C-18615)

க.மோகனதாஸ்
செயலாளர்.

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 10 - 12 - 1947

உதிர்வு 10 - 11 - 1999

### அமரர் வல்லிபுரம் வன்னியசிங்கன்

ஈண்டுவந்த இருந்துயரோ இன்று வரை வாட்டுதையா!
ஆண்டு இரண்டு சென்றாலும் ஆறாத கொடுந்துயரோ!
மாண்டு மடிவதெல்லாம் மாயையெனக் கொண்டாலும்
நீண்டு நின்ற நட்புறவால் நீள் புவியில் வாடுகிறோம்.

பிரிவால் துயருறும்:-

மனைவி:- புஸ்பராணி
மருமகன்:- மனோகரன்
மகள்:- திவ்வியரஞ்சனா
பேரப்பிள்ளைகள்:- நிவேதா, சுபாங்கி
(கனடா)

*கரவெட்டி கிழக்கு,*
*கரவெட்டி.* (93457)

## 40 பிள்ளைகளுக்கு வைத்திய சோதனை

வலி.தெற்கு,ஒக்.18

தென் இந்தியத் திருச்சபை யாழ். ஆதீன ஆயரின் அனுசரணையுடன் மானிப்பாய் கிறீன் மெமோறியல் வைத்தியசாலையில் குழந்தைப் பிள்ளைகளுக்கான விசேட இலவச மருத்துவ பரிசோதனைகள் அண்மையில் நடத்தப்பட்டன.

மானிப்பாய் வட்ட லயன்ஸ் கழகத்தின் ஏற்பாட்டில் லயன் டாக்டர் நவமலர் கனகரத்தினம் தலைமையில் முகாம் இடம்பெற்றது.

பன்னிரண்டு வயதுக்கு உட்பட்ட நாற்பதுக்கும் மேற்பட்ட வசதியற்ற பிள்ளைகளுக்கு வைத்தியப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.

யாழ்.போதனா வைத்தியசாலையின் குழந்தைகளுக்கான வைத்திய நிபுணர் டாக்டர் செல்வி கலாசோமசுந்தரம் வைத்திய பரிசோதனைகளை மேற்கொண்டார். இவருக்கு உதவியாக டாக்டர் பார்த்திபன், டாக்டர் செல்வி சிவகௌரி ஆகியோர் செயற்பட்டனர். (க-152)

## விளையாட்டுக்கழக கலந்துரையாடல்

வலி.வடக்கு,ஒக்.18

வலி.வடக்கு தெல்லிப்பழை பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட பதிவுசெய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுடனான கலந்துரையாடல் நாளை வெள்ளிக்கிழமை காலை 10.30 மணிக்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் பிரதேச செயலர் திருமதி ப.திலகநாயகம் போல் தலைமையில் இடம்பெறவுள்ளது.

எதிர்கால அபிவிருத்தித் திட்டங்கள் மற்றும் கழகங்களின் பதிவுகள் சம்பந்தமாக கலந்துரையாடப்படவுள்ளதால் அனைத்து விளையாட்டுக் கழகங்களினதும் பிரதிநிதிகளையும் இக்கலந்துரையாடலில் கலந்துகொள்ளும்படி பிரதேச செயலக விளையாட்டு உத்தியோகத்தர் கேட்டுள்ளார். (க-86)

## வலி.கிழக்கில் சர்வதேச முதியோர், சிறுவர்தின விழா


வலி.கிழக்கு,ஒக்.18

வலிகாமம் கிழக்கு பிரதேச செயலகத்தினால் நடத்தப்படும் சர்வதேச முதியோர், சிறுவர்தினவிழா நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 2மணிக்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் பிரதேச செயலர் க.கேதீஸ்வரன் தலைமையில் நடைபெறும்.

பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக ஓய்வுபெற்ற பிரதிப் பதிவாளர் கலாநிதி இ.முருகையனும், சிறப்பு விருந்தினர்களாக யாழ். மாவட்ட இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் தலைவர் வைத்திய கலாநிதி லயன் வை.தியாகராசா, சே பாய் உதவிக கல்விப் பணிப்பா இ.சிவஞானசுந்தரம் ஆகியோரும் கலந்துகொண்டு சிறப்பிக்கவுள்ளனர். -

இந்த நிகழ்வில் முதியோரைக் கௌரவித்தல், முதியோர், சிறுவர் தொடர்பான கட்டுரைப் போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கான பரிசுகள், சான்றிதழ்கள் வழங்கலும், கலைநிகழ்வுகளும் நடைபெறவுள்ளன. (க-180)

## அருந்துங்கள் அண்ணா கோப்பி




அண்ணா கோப்பியை உடனுக்குடன் வறுத்து அரைத்துப் பெற்றுக் கொள்ள

**அண்ணா கோப்பிக் கடை 4,**
**நவீன சந்தை,**
**யாழ்ப்பாணம்.**
(C/18748)

## நான்காம் ஆண்டில் நெஞ்சம் சுமக்கும் நினைவுகள்



### திருமதி தர்மராசா கனகாம்பிகை

மலர்வு 13-04-1935

உதிர்வு 02-11-1997

திதி: துதியை 18-10-2001

குடும்பத்தின் குலவிளக்காய்!
பாசத்தின் திருவுருவாய்த் திகழ்ந்த
எம் அன்புத் தாயே!
உங்கள் நினைவுகள் காலங்கள்
நகர்வதால் மறந்திடல் இல்லை
என்றும் பசுமையாய் எம்
நெஞ்சம் சுமக்கும் நினைவுகளாகும்.

*பிளாக் வீதி,*
*சங்கானை.* (93555)

உங்களையே நிதம் தேடும்:
**கணவர், பிள்ளைகள்.**

## இன்று தமது முதலாவது ஆண்டு நிறைவைக் கொண்டாடும்

# ஸ்ரீ வாலாம்பிகை அன் சன்ஸ்

ஸ்தாபனத்தார் தங்களின் வாடிக்கையாளர்கள், நண்பர்கள், அன்பர்கள் அனைவருக்கும் தங்களின் நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்வதில் பெருமகிழ்ச்சியடைகிறார்கள்.

அழகுசாதனப் பொருள்கள், அன்பளிப்புப் பொருள்கள், அலுமினியப்பொருள்கள், பிளாஸ்ரிக் பொருள்கள் மற்றும் எவர்சில்வர் பொருள்கள் என்பவற்றை மொத்தமாகவும் சில்லறையாகவும் மலிவு விலையில் பெற்றுக்கொள்ள.....

# ஸ்ரீ வாலாம்பிகை அன் சன்ஸ்

இல.28, பெரியகடை, (C/18749) யாழ்ப்பாணம்.

# தரிசு நிலங்களில் பயன்பெற சோளம் செய்கைக்கு இது 'சீஸன்'

யாழ்.மாவட்டத்தில் பயிர்ச்செய்கைக்கு உகந்த காணிகள் பயிர்ச் செய்கைக்கு உட்படுத்தப்படாமல் தரிசாக விடப்பட்டுள்ளமை அவதானிக்கப்படுகின்றது. இக்காணிகளிலும் வீட்டைச் சுற்றியுள்ள மேட்டுக்காணிகளிலும் பெரும்போகத்தில் மானாவாரியாகச் சோளப் பயிர்ச்செய்கையை வெற்றிகரமாக மேற்கொள்ளமுடியும். மிக இலகுவான இப்பயிர்ச்செய்கை மூலம் குறைந்த உற்பத்திச் செலவுடன் கூடிய விளைவையும் நல்ல வருமானத்தையும் பெறலாம்.

### முக்கியத்துவம்

யாழ்.மாவட்டத்துக்குத் தேவையான கால்நடை உணவுகள் பிற மாவட்டங்களில் இருந்தே கொண்டு வரப்படுகின்றன. கொண்டுவருதலில் ஏற்படும் சிரமங்கள் காரணமாக சில வேளைகளில் இவற்றுக்குத் தட்டுப்பாடும், விலை உயர்வும் ஏற்படுகின்றன. இதனால் தற்போது குடாநாட்டில் கால்நடை உணவு தயாரிக்கும் தொழிற்சாலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இதன் காரணமாகக் கால்நடை உணவுக்குப் பிரதானமாகப் பாவிக்கப்படும் சோளம் தானியத்துக்குக் கூடிய சந்தைவாய்ப்பு ஏற்பட்டுள்ளது. ஒரு கிலோ சோளம் தானியத்தை ரூபா இருபத்தைந்து (ரூ.25/=) வீதம் கொள்வனவு செய்யவும் முன்வந்துள்ளார்கள். மேலும் சோளம் இளம் பொத்திகளை அவித்து மக்கள் விரும்பி உண்பார்கள். சோளம் தானியத்தில் இருந்து சோளம் பொரி, திரிபோஷா போன்ற உணவுகளும், பலவிதமான உணவுப் பண்டங்களும் தயாரிக்கப்படுகின்றன. சோளத் தானியத்தை உடைத்து அரிசியுடன் சேர்தது சோறு பெருக்கியாகவும் சமைத்து உண்ணலாம்

### போசணைச் சத்துகள்

100 கிறாம் தானியத்தில் பின்வரும் போசணைகள் அடங்கியுள்ளன.

| | | |
|---|---|---|
| மாச்சத்து | - | 72 கிராம் |
| புரதச் சத்து | - | 9.5 கிராம் |
| கொழுப்பு | - | 4 கிராம் |
| சக்தி | - | 362 கிலோ கலோரி |
| கல்சியம் | - | 12 மில்லிகிராம் |
| இரும்பு | - | 2.5 மில்லிகிராம் |
| உயிர்ச்சத்து'ஏ' | - | 45 மைக்றோகிராம். |
| தயாமின் | - | 300 மைக்றோ கிராம் |

### பொருத்தமான காலநிலையும் நடுகைக் காலமும்

சோளம் பிரதானமாக மானாவாரியாக மேட்டுநிலங்களில் பயிரிடப்படுகின்றது. சோளத்தின் வளர்ச்சிக்கு நீர் நன்கு வடிந்து செல்கின்ற ஆழமான மண் தேவை. பெரும்போகத்தில் முதல் மழையுடன் புரட்டாதி மாத கடைசி முதல் ஐப்பசி இரண்டாம் வாரம்வரை பயிரிடுவதன் மூலம் தரமான விளைவை பெறமுடியும். சிறுபோகத்தில் நீர்ப்பாசனத்துடன் சித்திரை மாதம் தொடக்கம் வைகாசி கடைசி வரை பயிரிடமுடியும்.

(சிபார்சு செய்யப்பட்ட இனங்கள் அட்டவணை கீழே தரப்பட்டுள்ளது)

### தரை பண்படுத்தலும் நடுகையும்

நிலத்தை 15-25 ச.மீற்றர் ஆழம் வரை உழுது கட்டிகளை உடைத்து நன்கு தூர்வையாக்கப்பட வேண்டும். விதைகள் 2-3 ச.மீற்றர் ஆழத்தில் மண்ணில் நடப்படவேண்டும். பெரும்போகத்தில் சமதரையில் நாட்டலாம். சிறுபோகத்தில் நீர்ப்பாசன வசதிக்காக விதைகள் சால்களில் நாட்டப்படும். *(நடுகை இடைவெளி அட்டவணை கீழே தரப்பட்டுள்ளது)*

### விதைத் தேவை

8 கி.கிராம்/ஏக்கர்

### பசளைப் பாவனை

1. *சேதனப் பசளைப் பாவனை* - இயற்கைப் பசளை போதியளவு கிடைக்குமாயின் ஓர் ஏக்கருக்கு 2-6 மெற்றிக்தொன் வீதம் சேர்த்து உழுதுவிடவும்.
2. *அசேதனப் உரப் பாவனை.* (அட்டவணை கீழே தரப்பட்டுள்ளது)

### நீர்ப்பாசனம்

பெரும்போகத்தில் தேவை ஏற்படும் போது நீர்ப்பாசனம் செய்தல் நன்று. சிறுபோகத்தில் நடுகையில் இருந்து பயிர் முழங்கால் உயரம்வரை 4 நாள்களுக்கு ஒரு தடவையும், பின்பு அறுவடை வரை 8-10 நாள்களுக்கு ஒரு தடவையும் மண் 20 ச.மீற்றர் ஆழம்வரை, நனையக்கூடியவாறு நீர்ப்பாசனம் செய்தல் வேண்டும்.

### களைக்கட்டுப்பாடு

பயிர்நாட்டி 2ஆம் - 4ஆம் வாரங்களில் கைகளால் களைகள் கட்டுப்படுத்தப்படல் வேண்டும். 4ஆம் வாரம் களைகள் கட்டுப்படுத்திய பின் மேற்கட்டுப்பசளையைப் பாவித்து மண் அணைத்தல் வேண்டும்.

### பொத்தி உருவாகுதல்

ஒரே பயிரில் ஆண்பூ, பெண்பூ தனியாகத் தோன்றும். தண்டு வளர்ந்து இறுதியில் நுனியில் ஆண்பூ தோன்றும். பெண்பூ அடியிலைக் கணுக்களில் தோன்றும். மகரந்தச் சேர்க்கையின் பின் பெண்பூ பொத்தியாக விருத்தியடையும். ஒரு தாவரத்தில் இருந்து 1-2 பொத்திகள் பெறலாம்.

### பறவைகளின் தாக்கம்

பொத்தி விருத்தியடையும் போது பால் பருவத்தில் பறவைகளின் தாக்கம் ஏற்படும். எனவே இக்காலத்தில் காவல் செய்வது அவசியமானதாகும்.

### அறுவடை

நன்கு முற்றிய பொத்தியைக் கையால் முறித்து அறுவடை செய்யலாம். பொத்திகளில் உள்ள நீர்த்தன்மை 25-30 வீதத்தில் இருந்து 13-14 வீதம்வரை குறைப்பதற்காக மடல்கள் அகற்றப்படாத பொத்திகளை சூரிய ஒளியில் காயவிடப்பட வேண்டும். சில நாள்கள் வெயிலில் உலர்த்தப்பட்டு பின்பு தானியங்கள் பிரித்து எடுக்கப்படும். விதைக்காகச் சேமிக்கும்போது காய்ந்த மடலுடன் சேமிக்கலாம். ★

**ச.சின்னத்துரை**
உதவி விவசாயப் பணிப்பாளர்
*விவசாயத் திணைக்களம்.*

## கமமும் புலமும்

தயாரிப்பு: ஜெயஸ்ரீ

### சிபாரிசு செய்யப்பட்ட இனங்கள்:-

| இனம் | வயது (நாள்கள்) | தானியநிறம் | விளைவு கி.கி./ஏக்கர் |
|---|---|---|---|
| பத்ரா | 105 - 115 | செம்மஞ்சள் | 1600 |
| ருவான் | 110 - 115 | பொன்செம்மஞ்சள் | 1500 |

### நடுகை இடைவெளி

| இடைவெளி | தாவரஎண்ணிக்கை | பயிர் அடர்த்தி |
|---|---|---|
| 60x30 ச.மீ. | 1 தாவரம் | 2200 தாவரம்/ஏக். |
| 60x60 ச.மீ. | 2 தாவரம் | 2200 தாவரம்/ஏக். |

### அசேதன உரப் பாவனை

| | ஓர் ஏக்கருக்கு | | |
|---|---|---|---|
| | யூரியா (கி.கி.) | அடர் சுப்பர் பொஸ்பேற் (கி.கி.) | மியூறியேற் ஒவ் பொட்டாஸ் (கி.கி.) |
| அடி உரம் | 30 | 40 | 20 |
| மேற்கட்டு (4ஆம் வாரம்) | 100 | - | - |

# பொதுப் பரீட்சைக்கான ஏற்பாடுகளில் யாழ்.கல்வி வலயம் மும்முரம்

யாழ்.கல்வி வலயப் பாடசாலைகளில் ஆண்டிறுதிப் பரீட்சைகள் வலய மட்டத்தில் பொதுப் பரீட்சையாக நடைபெறும்.

பொதுப் பரீட்சைக்கான ஏற்பாடுகளை யாழ்.வலயக் கல்வி அலுவலகம் மும்முரமாக மேற்கொண்டு வருகிறது.

3ஆம் தரத்திலிருந்து 11ஆம் தரம் வரையிலான வகுப்புகளில் 9 ஆம் தரம் தவிர ஏனைய வகுப்புகளுககான பரீட்சைகள் வலயமட்டத்தில் நடைபெறும் என்றும் -

11ஆம் தரத்திற்கான முன்னோடிப் பரீட்சைகள் நவம்பர் முதல்வாரத்திலும் ஏனைய வகுப்புகளுக்கான பரீட்சைகள் நவம்பர் நடுப்பகுதியிலும் நடைபெறும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை -

தரம் 9ஆம் வகுப்புக்கான பரீட்சைகள் மாவட்ட மட்டத்தில் பொதுப் பரீட்சையாக நடைபெறவுள்ளது.

யாழ்.மாவட்டத்தில் உள்ள ஐந்து கல்வி வலயங்களையும் உள்ளடக்கி தரம் 9ஆம் வகுப்புக்கான பொதுப் பரீட்சை நவம்பர் மாதம் 8ஆம் திகதி தொடக்கம் 13ஆம் திகதி வரை நடைபெறும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (க-11)

# வலி.கிழக்குப் பிரதேசத்துக்கு 2கோடி ரூபா நிதி ஒதுக்கீடு

வலி.கிழக்கு,ஒக்.18

வலிகாமம் கிழக்குப் பிரதேச சபைக்குட்பட்ட பகுதியில் 84 புதிய வேலைத்திட்டங்களுக்கென 2கோடி ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

இந்தப் பகுதியில் உள்ள ஆலயங்கள், பாடசாலைகள், பொது மயானங்கள் பாலர் பாடசாலைகள் ஆகியவற்றைப் புனரமைப்புச் செய்யவும் -

நூலகங்களுக்கான நூல்கள், தளபாடங்களைக் கொள்வனவு செய்வதற்கும் -

இந்நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. (ஐ-180)

## சாயி சமித்தியில் இலவச பயிற்சி நெறிகள்

யாழ்ப்பாணம்,ஒக்.18

யாழ்.இராமநாதன் வீதியில் அமைந்துள்ள பகவான் ஸ்ரீ சத்ய சாயிசேவா நிலையத்தில் இலவச பயிற்சி வகுப்புகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

கைத்தொழில் (பனை ஓலை), தையல், ஆங்கில வகுப்புகள் அங்கு நடத்தப்படவுள்ளன.

கைத்தொழில், தையல் ஆகிய வகுப்புகளில் பெண்கள் கலந்துகொள்ளலாம் என்றும் -

பயிற்சி நெறிகளில் பங்குபற்ற விரும்புவோர் அடுத்த 10 நாள்களுக்குள் சத்யசாயி சேவா நிலையத்தின் சேவைப் பகுதிக்குத் தமது விண்ணப்பங்களை அனுப்பலாம் என்றும் -

தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## நூல் அறிமுக விழா

அ.யேசுராசாவின் 'தூவானம்' கலை இலக்கியப் பதிவுகள் நூலின் அறிமுக விழா எதிர்வரும் ஞாயிறு மாலை 5.00 மணிக்கு யாழ்.திருமறைக் கலாமன்ற கலைத் தூது மணி மண்டபத்தில் செம்பியன் செல்வன் தலைமையில் நடைபெறவுள்ளது.

குப்பிழான் ஐ. சண்முகன், பொன். பூலோகசிங்கம், அருட்திரு. அ. ஜெயசேகரம் அடிகள், ஜோன்சன் ராஜ்குமார் ஆகியோர் விமர்சன உரைகளை வழங்குவர். (ஐ)

## கல்விச்சாலைக் காட்சிகள்



கோண்டாவில் கிழக்கு கலைமகள் பாலர் பாடசாலையின் வருடாந்த விளையாட்டு விழா அண்மையில் நடைபெற்றது.

இந்த விழாவில் பிரதமவிருந்தினராகக் கலந்துகொண்ட பேராசிரியர் சபா.ஜெயராசா மங்கள விளக்கேற்றி விழாவை ஆரம்பித்து வைப்பதையும், லயன்.செல்லப்பா நடராசா உரையாற்றுவதையும் படங்களில் காணலாம். பாலர் பாடசாலை ஆசிரியை திருமதி ச.இராஜேந்திரனும் படத்தில் காணப்படுகின்றார். (க-7)



குருநகர் புனித ஜேம்ஸ் மகா வித்தியாலயத்தில் மாணவர்கள் இரவில் ஒன்று கூடிப் படிப்பதற்கு மின் ஒளி வசதி செய்யப்பட்டிருக்கிறது.

வித்தியாலய பழைய மாணவர் சங்கத்தினர் இதற்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளனர். மின் ஒளி வழங்கும் நிகழ்வின் ஆரம்ப வைபவத்தில் எடுக்கப்பட்ட படம் இது. (ஐ)



பண்ணாகம் தாசன் கல்வி நிலையத்தின் பரிசளிப்பு விழா அண்மையில் நடைபெற்றது.

இந்த விழாவில் பிரதமவிருந்தினராகக் கலந்து கொண்ட வலிகாமம் வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் கா.சந்திரபாலன் பொதுத்திறன் போட்டியில் முதல் பரிசைப் பெற்றுக்கொண்ட மாணவி ஒருவருக்கு பரிசில் வழங்குவதைப் படத்தில் காணலாம். *(சுழிபுரம் செய்தியாளர்)*



சங்கானை கிழக்கு விக்னேஸ்வரா வித்தியாசாலையின் வருடாந்த மெய்வன்மைப் போட்டிகள் அண்மையில் நடைபெற்றன.

இந்த விழாவில் பிரதமவிருந்தினராகக் கலந்துகொண்ட சு.சுந்தரசிவம் பாடசாலைக் கொடியை ஏற்றி வைப்பதைப் படத்தில் காணலாம். அருகில் பாடசாலை அதிபர் திருமதி ஸ்ரீ.பிரபாகரன், சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் கு.ஜெகநாதன் ஆகியோரும் காணப்படுகின்றனர்.

# வாழ்த்துகின்றோம்



அருட்கவி சீ.விநாசித்தம்பி

புலமையின் வடிவான பெரியோராய்
நலமே சிந்தையும் செயலுமானவரே
கௌரவ முதுமாணிப் பட்டம் உங்களால் பெருமை பெறும்
நீடு வாழ்ந்து நிறைபணி தாருங்கள்.

இரும்பு மதவடி, வதிரி, கரவெட்டி.

டாக்டர் ந.பத்மநாதன் குடும்பத்தினர். (93564)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்

கரம்பொன் சிறிய புஷ்ப மகளிர் மகா வித்தியாலய மாணவி

செல்வி

## இரத்தினசிங்கம் உஷானி

2001 - 5ஆம் தரப் புலமைப்பரிசில் பரீட்சையில் 127 புள்ளிகளைப் பெற்றமையையிட்டு அவரை மனதார வாழ்த்தி, மேன்மேலும் கல்வியில் சிறந்து விளங்கி, பல்கலையும் கற்றுப் பல்லாண்டுகாலம் வாழ வேண்டும் என்று இறைவனைப் பிரார்த்திக்கின்றோம். கல்வி கற்பித்த ஆசிரியர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்,
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,
யா/கரம்பொன் சிறிய புஷ்ப ம.ம.வி.

(93563)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை மாணவனும், வலி. தென்மேற்கு பிரதேச சபை பண்டத்தரிப்பு பட்டின உப அலுவலகத்தில் வருமான மேற்பார்வையாளராகப் பணியாற்றும் திரு.எஸ்.ஹரிமுகனின் புதல்வருமான

## டயான்

2001ஆம் ஆண்டு ஐந்தாம் தரப் புலமைப் பரிசில் பரீட்சையில் 133 புள்ளிகளைப் பெற்று சித்தி பெற்றதையிட்டு மகிழ்வுறும் நாம், அவர் கல்வி உலகில் மேன்மேலும் சிறப்புற்று விளங்கப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

(93556) பண்டத்தரிப்பு பட்டின உத்தியோகத்தர்கள்.

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



வ/வவுனியா தமிழ் மகாவித்தியாலய மாணவனும் தற்போது யா/வயாவிளான் மத்திய மகாவித்தியாலய மாணவனுமாகிய

## செல்வன் சிறீகாந்தன் மருஜன்

2001-5ஆம் தரப் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தமையையிட்டு அவரைப் பாராட்டி வாழ்த்துவதுடன், அவர் உயர்ச்சிபெறக் காரணமாக இருந்த அதிபர், ஆசிரியர்களுக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

புன்னாலைக்கட்டுவன் வடக்கு, சுன்னாகம்.

- பெற்றோர்கள்.

(93557)

# நன்றியுடன் பாராட்டி வாழ்த்துகின்றோம்

அல்லைப்பிட்டி சிந்தாமணிப் பிள்ளையார் கோயில்

மேற்படி கோயில் கட்டடத் திருப்பணி வேலைகளுக்காக இரண்டு லட்ச ரூபாவை ஒதுக்கீடு செய்து அதில் ஒரு லட்சம் ரூபாவை உடனடியாக எமக்கு வழங்கி உதவியவர்களான,



வடக்கு அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் வடக்கு - கிழக்கு தமிழ் விவகாரம், இந்து சமய கலாசார மாண்புமிகு அமைச்சர்

திரு.கே.என்.டக்ளஸ் தேவானந்தா

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் ஊர்காவற்றுறை பிரதேச சபைத் தலைவருமான

உயர்திரு.ந.மதனராசா (J.P.U.M.)





வேலணைப் பிரதேச சபைத் தலைவர்

உயர்திரு. ந.கருணாகரகுருமூர்த்தி (J.P.U.M.)

ஆகியோரை,

நன்றியுடன் மனமாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

பரிபாலன சபையினர்,
அல்லைப்பிட்டி சிந்தாமணிப் பிள்ளையார் கோயில். (93554)

## சோளம் செய்கையில் ஈடுபட உகந்த காலம்

வலி.கிழக்கு,ஒக்.18

தற்போதைய காலநிலையைப் பயன்படுத்தி யாழ்.மாவட்ட விவசாயிகள் சோளம் பயிர்ச் செய்கையில் ஈடுபடலாம் என்று யாழ்மாவட்ட உதவி விவசாயத் திணைக்களப் பணிப்பாளர் ஆலோசனை வழங்கியுள்ளார்.

குறைந்த செலவில் கூடிய வருமானத்தினை ஈட்டக் கூடிய இந்த சோளம் செய்கையில் ஈடுபடுவதன் மூலம் விவசாயிகள் கூடிய பயனைப் பெறமுடியும் எனவும் அவர் தெரிவித்தார். (க-180)

## போஷாக்குத் திட்டம்; உரும்பிராய் வடக்கில் 14 குடும்பங்கள் தெரிவு

வலி.வடக்கு,ஒக்.18

வலிகாமம் கிழக்கு பிரதேச செயலர் பிரிவில் உள்ள உரும்பிராய் வடக்கில் பங்களிப்பு பாங்கான போஷாக்கு நிகழ்ச்சித்திட்ட நடவடிக்கையின் கீழ் போஷாக்குக் குறைபாடான உறுப்பினர்களைக் கொண்ட 14 குடும்பங்கள் இனம் காணப்பட்டு அவர்களுக்கான அடிப்படைத் தேவைகள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

வலிகிழக்குப் பிரதேச செயலர் பிரிவில் பங்களிப்புப்பாங்கான போஷாக்கு நிகழ்ச்சித்திட்டத்தின் புள்ளிவிவரத்தின்படி போஷாக்குக் குறைந்த சிறுவர்கள் உள்ள பிரதேசமான உரும்பிராய் வடக்குப் பகுதியில் 14 குடும்பங்கள் முதற் கட்டமாகத் தெரிவுசெய்யப்பட்டன.

இந்த 14 குடும்பங்களுக்கும் அடிப்படை வசதியாக முதலில் தனித்தனியான மலசல கூடங்களை "யுனிசெவ்" நிறுவனம் அமைத்துக் கொடுத்துள்ளது.

இதேவேளை -

இப்பகுதியில் அகதிகளுக்கான ஐ.நா. தூதரகம் 34 பயனாளிகளுக்கு தலா 10 ஆயிரம் ரூபாவை சுழற்சி முறைக்கடன் அடிப்படையில் வழங்கவுள்ளது.

இக்கடன் மூலம் இப்பயனாளிகள், விவசாயம், சிறுகைத்தொழில் போன்றவற்றில் ஈடுபடமுடியும் என பிரதேச செயலக திட்டமிடல் பணிப்பாளர் தெரிவித்தார். (க-180)

## மட்டுவில் தெற்கு மாணவருக்கு!

யாழ்ப்பாணம்,ஒக்.18

மட்டுவில் தெற்கு சரஸ்வதி கனிஷ்ட வித்தியாலயத்தின் மூலம் தேசிய அடையாள அட்டைகளுக்கும், விசேட அடையாள அட்டைகளுக்கும் விண்ணப்பித்த மாணவர்களது அடையாள அட்டைகள் வந்து சேர்ந்துள்ளன.

விண்ணப்பித்த மாணவர்கள் தமது அடையாள அட்டைகளை உரும்பிராய் சந்திரோதய வித்தியாசாலையில் பெற்றுக் கொள்ளுமாறு பதில் அதிபர் எஸ்.சிவகுமாரன் தெரிவித்துள்ளார். (க-ரி)

## ஆலயத்துக்கு தண்ணீர்த் தாங்கி

சுழிபுரம் கம்பனை அம்பாள் ஆலயத்திற்கு ஒரு லட்சம் ரூபா செலவில் புதிய தண்ணீர்த் தாங்கியை பக்தர் ஒருவர் கட்டி வழங்கியுள்ளார். கட்டட வேலைகள் யாவும் பூர்த்தி அடைந்துள்ளன. (க-28)

## சிரமதானம்

சுழிபுரம், வழக்கம்பரையில் அமைந்துள்ள வலி.மேற்கு பிரதேச சபை தலைமை அலுவலகவளவில் நிறைந்து காணப்பட்ட புல்பூண்டு, பற்றைகள் சிரமதானம் மூலம் அபிவிருத்தித் தொண்டர்கள் சுத்தம் செய்தனர். நூற்றுக்கணக்கானவர்கள் இப்பணியில் ஈடுபட்டனர். (க-28)

# தேவை

கணனி பிறின்டிங் நிலையம் ஒன்றுக்கு கணனியில் 'ரைப் செற்றிங்' செய்வதற்கு ஆள்கள் (பெண்கள்) தேவை.

- Page maker
- Corel Darw
- Photo Shop

இவற்றில் அனுபவமுடையவர்கள் தொடர்புகொள்க.

சன் ரெக் கொம்னிகேஷன்,
நல்லூர் மார்கட்,
கல்வியங்காடு. (93566)

(கடந்த 16 தினங்களில் மட்டும்)

# விசர்நாய்களினால் கடியுண்ட 52 பேர் யாழ்.ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்றனர்

யாழ்ப்பாணம்,ஒக்.18

யாழ்.குடாநாட்டில் விசர்நாய்க் கடியின் தொல்லை நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டே செல்வது யாழ்.போதனா வைத்தியசாலைப் பதிவேடுகளின்படி தெரியவருகிறது.

கடந்த இரு தினங்களில் மட்டும் 12 பேர் விசர்நாய்களினால் கடியுண்டு யாழ்.ஆஸ்பத்திரியில் விசர்நாய்க் கடிக்கான ஏ.ஆர்.வி.தடுப்பூசி மருந்து போட ஆரம்பித்துள்ளனர்.

இதில் யாழ்ப்பாணத்தில் மாத்திரம் எட்டுப்பேர் விசர்நாய்க் கடிக்காளாகியுள்ளனர்.

இவர்களுடன் இம்மாதத்தில் 16 தினங்களில் 52பேர் நாய்களினால் கடியுண்டு சிகிச்சை பெற்றுள்ளனர். (க-15)

## மாதாந்த உதவிப் பணம்

தென்மராட்சி,ஒக்.18

பளைப் பிரதேச செயலகத்தில் பொதுசன மாதாந்த உதவிப் பணம் பெறுபவர்களுக்கான ஒக்ரோபர் மாதக் கொடுப்பனவுகள் நேற்றுமுன்தினம் தொடக்கம் அந்தந்த அஞ்சல் அலுவலகங்கள் மூலம் வழங்கப்பட்டு வருகிறது. (க-117)

# கேதார கௌரி விரத பூஜை

ஆரம்பம்:- 25.10.2001

1) துணாவில் குளம் கண்ணகை அம்மன் கோயில் – காலை 10 மணி.
2) நெல்லியடி ஸ்ரீ காளிகோயில் (மகாவித்தியாலய அருகில்) மாலை 3 மணி.

(அமிர்தபாஷினி வாரியார் சுவாமி திருப்பாதத்தில் வைத்து பூஜிக்கப்பட்ட நூல்)

தொடர்பு:-
ச.கு.ஜெகதீஸ்வரக்குருக்கள்,
ஞானசம்பந்தர் வீதி,
வட்டுக்கோட்டை.

(93558)

# நன்றியுடன் பாராட்டி வாழ்த்துகின்றோம்

கோப்பாய்ப் பிரிவு சுகாதாரத் தொண்டர் சங்கம்

சுகாதாரத் தொண்டர்களாகிய எமக்கு ஊக்குவிப்புக் கொடுப்பனவாக மாதம் 1000/= வீதம் ஒதுக்கீடு செய்து தந்துதவியமைக்காக,



மாண்புமிகு அமைச்சர்

கே.என்.டக்ளஸ் தேவானந்தா

அவர்களையும்

யாழ். மாவட்ட ஈ.பி.டி.பி. பிரதம அமைப்பாளர்

உயர்திரு. கே.வி.குகேந்திரன் (ஜெகன்)

அவர்களையும்





கோப்பாய் பிரதேச ஈ.பி.டி.பி. தலைவர்

உயர்திரு. பூ.குணசிங்கம்

அவர்களையும்

கோப்பாய் பிரதேச ஈ.பி.டி.பி. உபதலைவர்

உயர்திரு. பி.L.A.ரவி

அவர்களையும்



நன்றியுடன் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

(93559) கோப்பாய்ப் பிரிவு சுகாதாரத் தொண்டர்கள்.

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



திக்கம் மத்திய சனசமூக நிலையக் காப்பாளரும் யா/ஞானசாரியார் கல்லூரி பிரதி அதிபருமான

## திரு.சச்சிதானந்தம் ஸ்ரீராமச்சந்திரன்

அவர்கள் தரம் 2:1இற்கு பதவியுயர்வு பெற்றுச் செல்வதையிட்டு அவரை உளமாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம். அவர் மேலும் பல உயர்வுகள் பெற்று, சீருஞ்சிறப்புடன் வாழ எல்லாம்வல்ல திக்கம் மடத்துவாசற்பிள்ளையாரை வேண்டுகின்றோம்.

திக்கம், அல்வாய்.

திக்கம் மத்திய சனசமூக நிலையம்,
திக்கம் இளைஞர் வி.கழகம்,
திக்கம் (அல்வாய் மேற்கு)
கிராம அபிவிருத்திச் சங்கம். (93561)

குறிகாட்டுவான் ஊடாக

# மன்னாருக்குப் பொருள் அனுப்ப விவசாய சம்மேளனங்கள் உதவி

## பெறப்படவேண்டும் எனத் தீர்மானம்

அரியாலை, ஒக். 18

யாழ். குடாநாட்டில் உற்பத்தியாகும் விவசாய விளைபொருள்களை குறிகாட்டுவான் ஊடாக படகுகள் மூலம் மன்னாருக்கு அனுப்பிவைக்க சம்பந்தப்பட்ட பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள், விவசாய சம்மேளனங்களின் உதவியுடன் ஏற்பாடுகளை மேற்கொள்ளவேண்டும்.

—இவ்வாறு யாழ்.மாவட்ட விவசாய உற்பத்தி நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் நடத்திய கலந்துரையாடலின் இறுதியில் முடிவு செய்யப்பட்டது.

சமாசத்தின் அழைப்பின் பேரில், பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் தலைவர்கள் கலந்துகொண்ட இந்தக் கலந்துரையாடலிலேயே இத்தீர்மானம் எடுக்கப்பட்டது.

விவசாய சம்மேளனங்களின் உதவியுடன் வெங்காயத்தை ஆரம்பத்தில் கொள்வனவு செய்து குடாநாட்டில் இருந்து அனுப்பிவைப்பதென்றும்—

படகுகள் மூலம் அனுப்பிவைக்கப்படும் விவசாய விளைபொருள்கள் பழுதடையாமல் இருக்கும் வகையில் அவற்றை அனுப்பிவைக்க விவசாய சம்மேளனங்களின் உதவியுடன் நடவடிக்கை மேற்கொள்வதென்றும்—

கலந்துரையாடலில் தீர்மானிக்கப்பட்டது.

இக்கலந்துரையாடலில் நீர்வேலி, அச்சுவேலி, சுன்னாகம், உடுப்பிட்டி ஆகிய பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் தலைவர்கள், பொதுமுகாமையாளர்கள், கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இது குறித்து விவசாய சம்மேளனங்களுடன் ஆலோசனை நடத்திவிட்டு அடுத்தகட்ட நடவடிக்கையை மேற்கொள்ளவுள்ளதாகப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் தெரிவித்தன.

(ம-ஒ-17)

## சிரமதானம்

அரியாலை, ஒக். 18

கொழும்புத்துறை மேற்கு விநாயகர் ஆலயச் சுற்றாடல் சிரமதானம் மூலம் துப்புரவு செய்யப்பட்டுள்ளது.

நவராத்திரியை முன்னிட்டு ஆலய இந்து இளைஞர் மன்ற தொண்டர்களினால் இந்தச் சிரமதானப் பணி மேற்கொள்ளப்பட்டது. (ம-17)

# தென்மராட்சிப் பகுதி முன்பள்ளி ஆசிரியர்களுக்கு கொடுப்பனவு

யாழ்ப்பாணம், ஒக். 18

தென்மராட்சி, பளை ஆகிய பகுதிகளைச் சேர்ந்த முன்பள்ளி ஆசிரியர்களுக்கான ஊக்குவிப்புக் கொடுப்பனவுகள் வழங்கப்படவுள்ளன.

இதன்படி தென்மராட்சிப் பிரதேச செயலர் பிரிவு ஆசிரியர்கள் நாளை வெள்ளிக்கிழமை யாழ். செட்டித்தெருவில் இயங்கும் உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகத்திலும்—

பளைப் பிரதேச செயலர் பிரிவு ஆசிரியர்கள் நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 11 மணிக்கு கரவெட்டியில் இயங்கும் பளை பிரதேச சபையின் தற்காலிகப் பணிமனையிலும்—

தமக்குரிய கொடுப்பனவுகளைப் பெற்றுக்கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

''றான்'' அமைப்பு இந்தக் கொடுப்பனவை வழங்கியுள்ளது. (ம-7)

# நூல் வெளியீட்டு விழா

யாழ்ப்பாணம் ஒக். 18

கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை விரிவுரையாளர் மலர் சின்னையா எழுதிய ஆரம்பக்கல்வி மாணவர்களுக்கான ''கற்றல், கற்பித்தல் உத்தி'' பாடல் தொகுதி நூல் வெளியீட்டு விழா எதிர்வரும் 23 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு ஆசிரிய கலாசாலையின் ரதிலச்சுமி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கலாசாலையின் ஆரம்பக் கல்வி மன்றத் தலைவர் சு. மகாதேவா தலைமையில் நடைபெறும் இந்த விழாவில் கலாசாலை அதிபர் மு. பரஞ்சோதி, யாழ். மத்திய கல்லூரி அதிபர் க. இராசதுரை ஆகியோர் ஆசியுரையை நிகழ்த்துவர்.

வெளியீட்டுரையை யாழ். பல்கலைக்கழக நுண்கலைப் பீடத்தைச் சேர்ந்த பேராசிரியர் சுபா. ஜெயராசா நிகழ்த்துவார். நூலின் முதற் பிரதியை சமூக சேவைகள் உத்தியோகத்தர் கே. வி. சிவனேசன் பெற்றுக்கொள்வார்.

(ம-7)

# குறுகியகால நெல் இனங்களை விதைக்குமாறு அறிவுறுத்தல்

வலி.கிழக்கு, ஒக். 18

யாழ். குடாநாட்டில் நெற்பயிர்ச் செய்கையில் ஈடுபடவுள்ள விவசாயிகள் புதிய குறுகிய கால நெல் வர்க்கங்களை விதைக்குமாறு யாழ். மாவட்ட உதவி விவசாயப் பணிப்பாளர் ச.சின்னத்துரை விவசாயிகளுக்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.

மழை வீழ்ச்சிப் பரம்பலை ஆதாரமாகக் கொண்டு இனிவரும் நாள்களில் நெற்பயிர்ச் செய்கையில் ஈடுபடவுள்ளோர் குறுகிய கால 3 மாத புதிய நெல் வர்க்கங்களான ஏ.ரி.-353, ஏ.ரி.-303 ஆகியவற்றைப் பயிரிடுவதன் மூலம் கூடிய பயனைப்பெற முடியும் என்று அவர் கூறியுள்ளார்.

இந்த குறுகியகால நெல் வர்க்கத்தில் ஏ.ரி. 353 விதை நெல் ஆயிரம் புசல் கமநல சேவைத் திணைக்களத்தில் கையிருப்பில் உள்ளது என்றும், விவசாயிகள் தத்தமது பிரிவு கமநல சேவைநிலையத்துடன் தொடர்புகொண்டு பெறமுடியும் என்றும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை யாழ்.மாவட்டத்தில் விவசாயிகள் பரவலாக காலம் கூடிய உள்நாட்டு நெல்வர்க்கங்களையும், குறைந்த அளவில் சிபார்சு செய்யப்பட்ட பழைய நெல் வர்க்கங்களான மொட்டைக் கறுப்பன், பெரிய வெள்ளை போன்ற 4 — 5 மாதகால நெல்லையும் புதிதாக சிபார்சு செய்யப்பட்ட வர்க்கமான ஏ. ரி. 402 நெல்லையும் பரவலாக விதைத்துள்ளனர் எனவும் — அவர் மேலும் தெரிவித்தார்.

(க-180)

## கட்டட வேலைகள் இடைநிறுத்தம்

வல்வெட்டித்துறை மாவட்ட வைத்தியசாலையில் நிர்மாணிக்கப்பட்டுவரும் தாதிகள் விடுதிக்கான கட்டட வேலைகள் இடைநிறுத்தப்பட்டுள்ளதாக வைத்தியசாலை அதிகாரி .இ மயிலேறும்பெருமாள் தெரிவித்தார்.

ஒப்பந்தகாரருக்கு வழங்கப்படவேண்டிய பணம் செலுத்தப்படாமையே வேலை நிறுத்தப்பட்டமைக்குக் காரணம் எனவும் தெரிவிக்கப்பட்டது. (ம-31)

## நவராத்திரி நிகழ்வு

நவராத்திரி விழாவின் இரண்டாம் நாளான இன்று இணுவில் ஸ்ரீ பரராஜசேகரப் பிள்ளையார் ஆலய கல்யாண மண்டபத்தில் மாலை 6.30 மணிக்கு திருமதி சௌந்தரவல்லி தர்மலிங்கம் அவர்களது இசைக் கச்சேரி இடம்பெறும்.

## ரூ. 500, ரூ. 1000 முத்திரைகள் வந்தன

யாழ். பிரதம தபாலகத்துக்கு 500 ரூபா, 1000 ரூபா பெறுமதியான முத்திரைகள் வந்து சேர்ந்துள்ளன. தேவைப்படுவோர் பிரதம தபாலகத்துடன் தொடர்புகொண்டு அவற்றைப் பெற்றுக்கொள்ளலாம் என்று பிரதம தபாலதிபர் தெரிவித்தார். (ம)

# விளையாட்டு நிகழ்வுகள்

வலி. வடக்கு, ஒக் 18

வலிகாமம் கல்வி வலயத்திற்கு உட்பட்ட கோட்டங்களில் தெரிவு செய்யப்பட்ட பாடசாலை அணிகளுக்கு இடையேயான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று வியாழக்கிழமை இடம்பெறும் ஆட்டங்களின் விவரம் வருமாறு:-

காலை 8.30 மணிக்கு இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரியில் ஆரம்பமாகும் ஆட்டங்களின் விவரம் வருமாறு:-

### 16 வயதுப் பிரிவு

கந்தரோடை ஸ்கந்தவரோதயக் கல்லூரி எதிர் பண்டத்தரிப்பு ஜெசிந்தா றோ. க. வித்தியாலயம்.

வட்டுக்கோட்டை மத்தியகல்லூரி எதிர் ஏழாலை ஸ்ரீமுருகன் வித்தியாலயம்.

### 18 வயதுப் பிரிவு

சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரி எதிர் சங்கானை சிவப்பிரகாச ம. வி.

பிற்பகல் 2.30 மணிக்கு கந்தரோடை ஸ்கந்தவரோதயக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டங்களின் விவரம் வருமாறு:

### 16 வயதுப் பிரிவு

இளவாலைமெய்கண்டான் மகாவித்தியாலயம் எதிர் மானிப்பாய் இந்துக்கல்லூரி.

### 18 வயதுப் பிரிவு

இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி எதிர் அளவெட்டி அருணோதயக்கல்லூரி.

மானிப்பாய் இந்துக்கல்லூரி எதிர் வயாவிளான் மத்திய ம. வி.

பிற்பகல் 2.30 மணிக்கு மானிப்பாய் இந்துக்கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டங்களில் கலந்துகொள்ளும் அணிகள் வருமாறு:-

### 16 வயதுப் பிரிவு

மூளாய் சைவப்பிரகாச வித்தியாலயம் எதிர் கந்தரோடை தமிழ் கந்தையா வித்தியாலயம்.

### 18 வயதுப் பிரிவு

மூளாய் சைவப்பிரகாச வித்தியாலயம் எதிர் சுன்னாகம் மயிலணி சைவ மகா ஜன வித்தியாலயம். (க-86)

## சிறிசேனகுரே பொ. ஐ. மு. வில் இணைவார்?

ஐ. தே. க. வின் முக்கியஸ்தராகவிருந்து பின்னர் பிரஜைகள் முன்னணி (புரவசிபெரமுன) என்னும் கட்சியை ஆரம்பித்து கடந்த தேர்தலில் போட்டியிட்டு தோல்வியடைந்தவரான சிறிசேன குரே பொதுமக்கள் ஐக்கிய முன்னணியில் இணைவதற்கான வாய்ப்புக்கள் பற்றி பரிசீலனை செய்து வருவதாக பொ. ஐ. மு. வட்டாரங்கள் தெரிவித்தன.

பொ. ஐ. மு. சார்பில் போட்டியிடும் வாய்ப்புக்கள் பற்றி ஆராய்வதற்கென அவர் சில தூதுவர்களை அனுப்பியிருப்பதாகவும். நேரில் சென்று எவரையும் சந்திக்கவில்லை என்றும் அறியப்படுகிறது

தற்போது ஆஸ்திரேலியாவில் வசித்துவரும் சிறிசேன குரே ஒக்ரோபர் 18 ஆம் திகதி நாடுதிரும்பவுள்ளார்.

(க)


## அரசாங்க கேள்வி அறிவித்தல்

## சலவைச் சேவை - 2002

சுகாதார சேவைகள் பிரிவு - யாழ்ப்பாணம்

2002 ஆம் ஆண்டில் யாழ்ப்பாணம் சுகாதார சேவைகள் பிரிவிலுள்ள அரசாங்க வைத்திய நிறுவனங்களுக்கு சலவைச் சேவை வழங்குவதற்கான கேள்விகள் 2001 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 28 ஆம் திகதி புதன்கிழமை முற்பகல் 12.00 மணிவரை ஏற்றுக்கொள்ளப்பட்டு உடன் திறக்கப்படும்.

கேள்விப் பத்திரங்களைப் பெறவிரும்புவோர் மீளளிப்புடனான கேள்விக் கட்டுப்பணத்தையும் உரிய கேள்விப் பத்திரப் பணம் ரூபா 50/- யும் செலுத்தி 27-11-2001 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2.30 மணிவரை இப்பணிமனையில் பெற்றுக்கொள்ளலாம்.

கேள்விகள் சீல்வைத்த உறையிலிட்டு கேள்வி விவரம் எழுதப்பட்டு கேள்விப் பெட்டியில் இடப்படல் வேண்டும். வேறு விவரங்கள் அலுவலக நேரங்களில் அறிந்துகொள்ளமுடியும். நியமிக்கப்பட்ட திகதிகளுக்கு மேலாகக் கேட்கப்படும் கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

வைத்திய கலாநிதி உ. சிவபாதசுந்தரம்,
மாகாணப் பிரதிப் பணிப்பாளர்,
சுகாதார சேவைகள், யாழ்ப்பாணம்.

இல. 8/1, கற்பக விநாயகர் ஒழுங்கை,
கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம். (சி/18756



## மரண அறிவித்தல்

## பொன்னுத்துரை குருசாமி

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் அராலியை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னுத்துரை குருசாமி 16 - 10 - 2001 அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் அம்பிகாவதியின் அன்புக் கணவரும், திருமதி சுஜாதினி அனுரா (ஆசிரியை, வட்டு மத்திய கல்லூரி), Dr சுஜாகரன் (மாத்தளை வைத்தியசாலை), சுபாஜினி (யாழ். மருத்துவபீட 4 ஆம் வருட மாணவி), கபிலன், கவிதா (யாழ்ப்பாணக் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற சிவசுப்பிரமணியம், காலஞ்சென்ற சிவகிருஷ்ணராஜா, திருமதி த. குலசேகரம் (ஓய்வு பெற்ற அதிபர், நுணாவில் மேற்கு). காலஞ்சென்ற திருமதி நா. சோமசுந்தரம் மற்றும் திருமதி மு. பாலச்சந்திரா (ஆஸ்திரேலியா) ஆகியோரின் சகோதரனும் திரு. கி. போ. அனுரா (ஆசிரியர் யாழ்ற்ரன் கல்லூரி, காரைநகர்). திருமதி சு. நிதர்சனி ஆகியோரின் மாமனாரும் ஷானுஜன், ஷாஜினி ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று 18-10-2001 வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணி (புதிய நேரம்) அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பூநாவடை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

தகவல்:
Dr. சுஜாகரன் (மகன்)
திரு. கி. போ. அனுரா (மருமகன்)

அராலி மத்தி,
வட்டுக்கோட்டை. (93575)



## ''நியந்த்ரி''

2001 ஆம் ஆண்டு நடைபெற்ற 5 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த அந்தண மாணவர்கள், தமது விவரங்களை 2001 - 10 - 31க்கு முன்னர் எமக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.

சிவன் கோவில், நல்லூர்.

செயலர்,
நியந்த்ரீ. (சி/13757)

# வலிகாமம் மேற்குப் பிரதேச சபை, சுழிபுரம்
# றான் நிதி ஒதுக்கீடு - 2001





எமது பிரதேச வளர்ச்சிக்கு அபிவிருத்தி க்ருதி மக்கள் எம்மிடம் விடுத்த வேண்டுகோளையடுத்து வடக்கு அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் வடக்கு - கிழக்கு தமிழ் விவகாரங்கள் இந்துகலாசார அமைச்சர் கௌரவ **கே.என்.டக்ளஸ் தேவானந்தா** அவர்களால், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் **திரு.கா.வே.குகேந்திரன்** ஊடாக 20,820,000.00 நிதி ஒதுக்கித்தந்துள்ளார்.

மேற்படி நிதியைப் பெறவுள்ள ஆலயங்கள், பாடசாலைகள், சனசமூக நிலையங்கள் ஆகியவற்றின் பிரதிநிதிகளை அழைத்து, இந்த வேலைகளைத் துரிதகதியில் செய்வதற்கு கலந்தாலோசிக்கவுள்ளோம்.

**திரு.ந.திரிலோகநாதன் ஜே.பி.யு.எம்.**
வலிகாமம் மேற்குப் பிரதேச சபைத் தலைவரும்,
வட்டுக்கோட்டைத் தொகுதி ஈ.பி.டி.பி. அமைப்பாளரும்,
ஈ.பி.டி.பியின் வடபிராந்திய இந்து சமயப் பொறுப்பாளரும்.

| இல. | ஸ்தாபனம் | ஒதுக்கீடு |
|---|---|---|
| 01. | சிறி மகாகணபதிப் பிள்ளையார் கோயில். | 300,000.00. |
| 02. | விசுவத்தனை முருகமூர்த்தி கோயில். | 200,000.00. |
| 03. | மயிலப்புலம் கந்தசுவாமி கோயில். | 1,000,000.00. |
| 04. | மாமர மோதகப் பிள்ளையார் கோயில். | 600,000.00. |
| 05. | தமிழ்ச் சங்கம். | 1,000,000.00. |
| 06. | வழக்கம்பரை சிறி முத்துமாரி அம்பாள் ஆலயம். | 700,000.00. |
| 07. | ஹரிஹர புத்திர ஐயனார் கோயில். | 300,000.00. |
| 08. | காந்திஜி ச.ச.நிலையம். | 1,000,000.00. |
| 09. | சிவப்பிரகாச வித்தியாலயம். | 1,000,000.00. |
| 10. | சிறி முத்துமாரி அம்பாள் ஆலயம். | 500,000.00. |
| 11. | விக்ரோறியாக் கல்லூரி. | 800,000.00. |
| 12. | பெரிய தம்பிரான் ஆலயம். | 300,000.00. |
| 13. | இத்தனை வைரவர் கோயில். | 200,000.00. |
| 14. | அடைக்கலந் தோட்டம் கந்தசுவாமி கோயில். | 400,000.00. |
| 15. | இந்துக் கல்லூரி, வட்டுக்கோட்டை. | 1,000,000.00. |
| 16. | அமெரிக்கன் மிசன் பாடசாலை. | 1,000,000.00. |
| 17. | அருள்மிகு லோகசிட்டி பிள்ளையார் கோயில். | 500,000.00. |
| 18. | புனித பிரான்ஸிஸ் சலேசியார் ஆலயம். | 500,000.00. |
| 19. | வட்டு.மத்திய கல்லூரி. | 500,000.00. |
| 20. | அராலி ஆவரம்பிட்டி அம்மன் கோயில். | 300,000.00. |
| 21. | கூடத்து மனோன்மணி அம்மன் கோயில். | 100,000.00. |
| 22. | சித்தி விநாயகர் கலையரங்கம். | 100,000.00. |
| 23. | யா/சித்தன்கேணி ஸ்ரீ கனேசா வித்தியாசாலை. | 500,000.00. |
| 24. | யா/பண்ணாகம் மெய்கண்டான் மகாவித்தியாலயம், சுழிபுரம். | 500,000.00. |
| 25. | யா/அராலி சரஸ்வதி வித்தியாலயம். | 500,000.00. |
| 26. | யா/சுழிபுரம் ஐக்கிய சங்க சைவ வித்தியாசாலை. | 200,000.00. |
| 27. | சித்தன்கேணி பெரியவளவு ஸ்ரீ மகாகணபதிப் பிள்ளையார் ஆலயம். | 250,000.00. |
| 28. | சித்தன்கேணி ஸ்ரீ சிவசிதம்பரேஸ்வரர் ஆலயம். | 200,000.00. |
| 29. | தொல்புரம் பத்தாணையம்பதி ஸ்ரீ ஞானவைரவர்சுவாமி ஆலயம். | 200,000.00. |
| 30. | பொற்புலம்பதி மகா காளியம்பாள் ஆலயம், மூளாய். | 250,000.00. |
| 31. | சித்தன்கேணி ஞானவைரவர் ஆலயம், கலைநகர் வீதி, சித்தன்கேணி. | 300,000.00. |
| 32. | அருள்மிகு நாக கன்னி அம்பாள் ஆலயம், சித்தன்கேணி. | 300,000.00. |
| 33. | அருள்மிகு சம்பு நாதேஸ்வரம் ஆலயம், சுழிபுரம். | 500,000.00. |
| 34. | சுழிபுரம் ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் தேவஸ்தானம். | 300,000.00. |
| 35. | பிராட்டி வளவு ஞானவைரவர் தேவஸ்தானம், கலைநகர் வீதி, சித்தன்கேணி. | 300,000.00. |
| 36. | தெவிண்டைப்பிராய் முருகமூர்த்தி தேவஸ்தானம், துணவி, அரசடிப் பிள்ளையார் கோயில் பரிபாலன சபை, துணவி, சங்கரத்தை, வட்டுக்கோட்டை. | 200,000.00. |
| 37. | நாவலர் ச.ச.நிலையம். | 20,000.00. |
| 38. | வடலியடைப்பு கிராமத்துக்கு மின்விநியோகம். | 1,000,000.00. |
| 39. | கிராம அபிவிருத்திச் சங்கம், நிற்சாமம், சங்கானை. | 200,000.00. |
| 40. | பொதுச் சந்தை, சங்கானை. | 2,000,000.00. |
| 41. | சென்.ஜேம்ஸ் கிராம அபிவிருத்திச் சங்கம், பண்டத்தரிப்பு அம்மன் வீதி, சென்.ஜேம்ஸ் வீதிக்கான மின்சாரம். | 500,000.00. |
| 42. | ஞான வைரவர் கோயில் பெரியபுலோ, சுழிபுரம். | 300,000.00. |

**எந் நன்றி கொன்றார்க்கும்**

**உய்வுண்டாம் உய்வில்லை**

**செய் நன்றி கொன்ற மகர்க்கு**

(C/18751)

# நிமலராஜன் நினைவாக நாளை இரத்ததானம்

யாழ்ப்பாணம்,ஒக்.18

பத்திரிகையாளர் அமரர் மயில்வாகனம் நிமலராஜனின் முதலாமாண்டு நினைவு தினத்தை முன்னிட்டு நாளை வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு யாழ்.பல்கலைக்கழக மாணவர் நிலையத்தில் இரத்ததான நிகழ்வு ஒன்று நடைபெறவுள்ளது.

யாழ்.பல்கலைக்கழக முல்லைத்தீவு மாவட்ட மாணவர் ஒன்றியம் வடஇலங்கைப் பத்திரிகையாளர் சங்கத்துடன் இணைந்து இந்த நிகழ்வை ஏற்பாடு செய்துள்ளது. (ம-7)

# சமயா சமய ஊழியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கப்படும்

கொழும்பு,ஒக்.18

அரச அலுவலகங்களில் சமயா சமய அடிப்படையில் பணிபுரியும் ஊழியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கப்படவுள்ளது.

அமைச்சரவை இதற்கான அங்கீகாரத்தை நேற்று வழங்கியதாக அமைச்சர் அதாவுட செனவிரட்ண தெரிவித்துள்ளார்.

180 நாள்களுக்கு மேல் தொடர்ச்சியாகக் கடமையாற்றிய அனைவருக்கும் நிரந்தர நியமனம் வழங்கப்படும் என்றும் -

அரசுக்குச் சொந்தமான கூட்டுத்தாபனங்கள், கம்பனிகள் ஆகியவற்றில் பணிபுரிவோருக்கும் இவ்வாறு நிரந்தர நியமனம் வழங்கப்படும் என்றும் -

அவர் தெரிவித்தார்.

அடுத்தவாரம் இந்த நிரந்தர நியமனம் குறித்த ஏற்பாடுகள் பூர்த்தி செய்யப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ம-7)

## ஓய்வு பெற்ற நீதிபதி வீட்டுக்கு குண்டுவீச்சு

மேல்நீதிமன்றத்தின் ஓய்வுபெற்ற நீதிபதி பியாலவடிவேலின் திருகோணமலை வீடு திங்கட்கிழமை இரவு 8.30 மணியளவில் குண்டுவீச்சுக்கு இலக்கானது.

இக்குண்டுவீச்சில் காவல் கடமையில் ஈடுபட்டிருந்த பொலீஸ் கான்ஸ்டபிள் காயமுற்றார். இவர் திருமலை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

குண்டு வீச்சில் வீட்டின் 'கேற்' மாத்திரம் சேதமுற்றதாக பொலீஸார் தெரிவித்தனர். அங்கு கடமையில் இருந்த தமிழ் பொலீஸ் கான்ஸ்டபிளை இலக்குவைத்து குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டதா? அல்லது முன்னாள் நீதிபதியின் இல்லத்தை இலக்குவைத்து குண்டு வீசப்பட்டதா? என்பதையிட்டு பொலீஸார் தீவிர விசாரணை செய்து வருகின்றனர். (க)



## வாழிய பல்லாண்டு

06.10.2001 அன்று நடைபெற்ற யாழ்.பல்கலைக்கழகப் பொதுப் பட்டமளிப்பு விழாவில் "முதுகலைமாணி" பட்டம்பெற்ற

**அருட்கவி சீ.விநாசித்தம்பி ஐயா**

அவர்களின் சமய, சமுதாயப் பணிகளைப் பாராட்டுவதோடு ஐயா அவர்கள் எமது ஆலயத்திற்கும் ஸ்ரீரங்கன் சனசமூக நிலையத்திற்கும் ஆற்றிய சேவைகள் மேன்மேலும் வளர எல்லாம்வல்ல சிவஞானவைரவப் பெருமானின் அருளை வேண்டி நிற்கின்றோம்.

சிவஞானவைரவர் ஆலய பரிபாலனசபை,
ஸ்ரீரங்கன் சனசமூக நிலைய
நிர்வாக சபை.

*முருகபுரம்,*
*அளவெட்டி மேற்கு.* (93574)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



அளவையூர் அருட்கவி

*சீ. விநாசித்தம்பிப் புலவர்*

அவர்களுக்கு யாழ். பல்கலைக்கழகம் "முதுகலைமாணி"ப் பட்டம் வழங்கிக் கௌரவித்தமையையிட்டு நாம் பெருமகிழ்வு அடைகின்றோம்.

அவரின் தெய்வப்பணியும், தமிழ்ப்பணியும் மேலும் தொடர பிரார்த்திக்கின்றோம்.

தெய்வசித்தன்
லயன்.S.நடராஜா,
த.தர்மசூரியர்.

*அரசடி வீதி,*
*உரும்பிராய்.* (93576)

## ராஜா யாழ்ப்பாணம்

விஜய், சிம்ரன் நடித்த

**ப்ரியமானவளே**

தினசரி: 10.30, 2.30 (புதிய நேரம்)
சனி, ஞாயிறு 10.30, 2.5 (புதிய நேரம்)
அடுத்த வெளியீடு

**உரிமைக்குரல்**

(C/18719)

## நாகம்ஸ் சுன்னாகம்

**THE PLOT**

(ரீல்ஸ்)
(இதுவரை கண்டிராத ஆண்கள், பெண்களுக்கிடையிலான விறுவிறுப்பான கராட்டிச் சித்திரம்)
காட்சிகள்:- 11.00, 2.30 (புதியநேரம்)

(93568)

## தர உள்ளீட்டுப் பொருள்களுக்கான கூறுவிலை கோரல்

தீவகக் கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளுக்கு வழங்குவதற்காக கருவி உபகரணங்களுக்கு கூறுவிலை கோரப்படுகிறது. தேவையான பொருள்களின் விவரப்பட்டியலை 19.10.2001 ஆம் திகதி முதல் வலயக்கல்வி அலுவலகத்தில் பெற்று 29.10.2001 ஆம் திகதி முற்பகல் 12 மணிக்கு முன்னர் நேரடியாகவோ, தபால் மூலமாகவோ அனுப்பிவைக்குமாறு கோரப்படுகிறீர்கள்.

வலயக்கல்விப் பணிப்பாளர்,
தீவக வலயக்கல்வி அலுவலகம்,
வேலணை.

(C/18754)

## கண்ணீர் அஞ்சலி

முன்னாள் உதவிக்கல்விப் பணிப்பாளர்
திரு.க.கனகசிங்கம் அவர்களின்
அன்பு மனைவியார்

**திருமதி சுபத்திராதேவி கனகசிங்கம்**

அவர்கள் காலமானதையிட்டு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

முதன்மை ஆசிரியர்கள்,
வலயக் கல்வித் திணைக்களம், யாழ்ப்பாணம்.

(93572)

## இருதய அஞ்சலி

எமது கல்லூரி ஆசிரியர்
திரு.யோசப் அனுரா அவர்களின் அன்பு மாமனார்

**பொன்னுத்துரை குருசாமி**

அவர்கள் இறைபதம் எய்தியதையிட்டு எமது இருதய அஞ்சலியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

யா/யாழ்ரன் கல்லூரி,
காரைநகர். (93571)

அதிபர்,
ஆசிரியர்கள்.

# அரசாங்க கேள்வி அறிவித்தல்

## சுகாதார சேவைகள் பிரிவு - யாழ்ப்பாணம்

## பால் தவிர்ந்த சமைத்த/ உலர் உணவு வழங்கல் - 2002

2002ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் சுகாதார சேவைகள் பிரிவிலுள்ள கீழ்வரும் வைத்தியசாலைகளுக்கு பால் தவிர்ந்த சமைத்த/ உலர் உணவு வழங்குவதற்கான கேள்விகள் 28.11.2001 புதன்கிழமை நண்பகல் 12 மணி வரை ஏற்றுக்கொள்ளப்பட்டு உடன் திறக்கப்படும். கேள்விப்பத்திரங்கள் பெறவிரும்புவோர் தமது பெறுமதிச் சான்றிதழும் (Worth Report) எம்மால் குறிப்பிடப்படும் தொகைக்கு ஏற்ப உத்தரவாதமுறியும் (Bid Bond) சமர்ப்பித்து கேள்விப்பத்திரப்பணமாக ரூபா 100/- உம் அட்டவணையிற் காட்டப்பட்ட மீளளிப்புடனான கேள்விக் கட்டுப்பணமும் செலுத்தி 27.11.2001 செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2.30 மணிவரை இப்பணிமனையிற் பெற்றுக் கொள்ளலாம்.

விவரங்கள் கீழ் குறிப்பிடப்படுகின்றன.

### உலர் உணவு வழங்குவதற்கான வைத்தியசாலைகள்

| நிறுவனங்கள் | கேள்விப் பிணை | உத்தரவாதமுறி 2 - மாதம் | பெறுமதிச் சான்றிதழ் |
|---|---|---|---|
| ஆ.வை., பருத்தித்துறை | 3,000 | 200,000 | 20,000 |
| மா.வை., வல்வெட்டித்துறை | 2,000 | 142,000 | 20,000 |
| மா.வை., தெல்லிப்பழை | 2,000 | 162,000 | 20,000 |
| மா.வை., நெடுந்தீவு | 2,000 | 104,000 | 20,000 |
| மா.வை., ஊர்காவற்றுறை | 2,000 | 80,000 | 20,000 |
| சுற்றயல்கூறு, சங்கானை | 1,500 | 80,000 | 15,000 |
| சுற்றயல்கூறு, கோப்பாய் | 1,500 | 62,000 | 15,000 |

### சமைத்த உணவு வழங்குவதற்கான வைத்தியசாலைகள்

| நிறுவனங்கள் | கேள்விப்பிணை | உத்தரவாதமுறி 2 - மாதம் | பெறுமதிச் சான்றிதழ் |
|---|---|---|---|
| சு.கூறு, அச்சுவேலி | 1,500 | 118,000 | 15,000 |
| சு.கூறு, அனலைதீவு | 1,500 | 44,000 | 15,000 |
| சு.கூறு, காரைநகர் | 1,500 | 44,000 | 15,000 |
| சு.கூறு, நயினாதீவு | 1,500 | 42,000 | 15,000 |
| கி.வை, வேலணை | 1,500 | 40,000 | 15,000 |
| கி.வை, வட்டுக்கோட்டை | 1,500 | 44,000 | 15,000 |
| ம.ம.ம.ம., கரவெட்டி | 1,000 | 24,000 | 15,000 |
| ம.ம.ம.ம., வரணி | 1,000 | 30,000 | 15,000 |
| ம.ம.ம.ம., மானிப்பாய் | 1,000 | 36,000 | 15,000 |
| ம.ம.ம.ம., கோண்டாவில் | 1,000 | 32,000 | 15,000 |
| ம.ம.ம.ம., அளவெட்டி | 1,000 | 32,000 | 15,000 |

கேள்விகள் இணைப்பிரதிகளில் மூலப்பிரதி தனியாகவும், இணைப்பிரதி தனியாகவும் சீல்வைத்த உறைகளிலிட்டு கேள்வி விவரம் எழுதப்பட்டு கேள்விப்பெட்டியில் இடப்படல் வேண்டும். கேள்விகள் தபாலில் இடப்படின் தாமதத்திற்கு அலுவலகம் பொறுப்பாகமாட்டாது. **நிர்ணயிக்கப்பட்ட தொகைகளுக்கு மேலாக சமர்ப்பிக்கப்படும் கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.** மேலதிக விவரங்களை பணிமனையில் அலுவலக நேரங்களில் அறிந்துகொள்ளமுடியும். கேள்வி திறக்கப்படும்போது கேள்விக்காரர் அல்லது அவரால் அதிகாரம் அளிக்கப்பட்ட பிரதிநிதி கலந்துகொள்ளமுடியும்.

வைத்தியகலாநிதி உ.சிவபாதசுந்தரம்,
மாகாணப் பிரதிப் பணிப்பாளர்,
சுகாதார சேவைகள், யாழ்ப்பாணம்.

*இல.8/1, கற்பக விநாயகர் ஒழுங்கை,*
*கச்சேரி நல்லூர் வீதி,*
*யாழ்ப்பாணம்.* (C/18755)

# மரண அறிவித்தல்கள்

## சுப்பிரமணியம் நகுலேஸ்வரன் (ரவி)

**(திவ்வியா நகைக்கடை, ஆட்டோ - உரிமையாளர்)**

யாழ்ப்பாணம், வண்ணார்பண்ணையைப் பிறப்பிடமாகவும் இல.3, சீனிவாசகம் வீதி, கொட்டடியை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் நகுலேஸ்வரன் (ரவி) 15.10.2001 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பிரமணியம் - பரமேஸ்வரியின் அன்பு மகனும் காலஞ்சென்ற செல்வரத்தினம் - மனோன்மணியின் அன்பு மருமகனும் மகிழ்மலரின் அன்புக் கணவரும் பிரதீப், லக்சனா, சசிகரன், நர்மினா, திவ்யா, சஞ்சீவன் ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் ஜெயதேவி (கொழும்பு), இந்திராதேவி (ஜேர்மன்), சுபாசினிதேவி (சுவிஸ்), ரதிதேவி (சுவிஸ்), சாந்தாதேவி, ஜெயந்தி (கொழும்பு), உதயகுமாரி, ஸ்ரீதரன் (கொழும்பு), பிரபாகரன் (சுவிஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் சோதிலிங்கம், சிறீஸ்கந்தராசா, மகேஸ்வரன், காலஞ்சென்ற தனம் ஜெயராசா மற்றும் தவநாயகம், சிவகுமார், மோகனகுமார், குணரத்தினம் (சுவிஸ்), செல்வகுமார் (சுவிஸ்), சிவராசா (லண்டன்), சித்திரா, சுமித்தா, பாக்கியரத்தினம், மனோராணி, கிருஷ்ணலீலா, காலஞ்சென்ற கமலாதேவி மற்றும் விமலாதேவி, சுபந்தினி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.10.2001) வியாழக்கிழமை 12.00 மணிக்கு அவரது வீட்டில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக வில்லூன்றி மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

*இல.03, சீனிவாசகம் லேன்,*
*கொட்டடி,*
*யாழ்ப்பாணம்.* (93569)

தகவல்:
ந.மகிழ்மலர் (மனைவி),
T.சோதிலிங்கம் (மைத்துனர்).

## செல்லர் இரத்தினம்

சுதுமலையைப் பிறப்பிடமாகவும், இணுவில் மேற்கு, ஞானவைரவர் கோயிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லர் இரத்தினம் அவர்கள் 16.10.2001 செவ்வாய்க்கிழமை காலமானார்.


அன்னார் நாகமணியின் அன்புக் கணவரும், இராசரத்தினம், உதயகுமார், பாலகுமார், கோபாலகிருஷ்ணன், கிருஷ்ணகுமார் ஆகியோரின் பாசமிகு தந்தையும், சுமதி, கோமதி, கௌசலாதேவி ஆகியோரின் மாமனாரும், தேனுஷா, மேனுஷா, சிரோஷன், ஜெனா, நிஷாந்தன், உதயசங்கர், பாரதி, தயானா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

*கற்பகப்பிள்ளையார் கோயிலடி,*
*உடுவில் கிழக்கு.* (93573)

தகவல்:
ப.தில்லைநாதன்
(பேறாமகன்)



பத்திரிகையாளர் மயில்வாகனம் நிமலராஜனின் முதலாவது ஆண்டு நினைவு தினம் நாளையாகும். இதனையொட்டி யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நினைவுதின நிகழ்வு நேற்று இடம்பெற்றது கொழும்பிலிருந்து வருகை தந்த 'யுக்திய' பத்திரிகை ஆசிரியர் சுனந்த தேசப்பிரிய, பதில் நீதி வான் மு.திருநாவுக்கரசு, 'ராவய' பத்திரிகையாளர் சுனில் விஜயசேகர ஆகியோர் உரையாற்றுவதை அடுத்துள்ள படங்களில் காணலாம்.

# "நிமால் கொலைக்கு காரணமானவர்களுக்கு யாழ்.மக்கள் தகுந்த பாடம் புகட்ட வேண்டும்"

## 'யுக்திய' ஆசிரியர் நேற்று யாழ்.பல்கலையில் உரை

பத்திரிகையாளர் நிமலராஜனின் கொலைக்குக் காரணமானவர்களுக்கு யாழ்மக்கள் இந்தத் தேர்தலில் தகுந்த பாடம் புகட்டவேண்டும்.

- இவ்வாறு தெரிவித்தார் கொழும்பிலிருந்து வெளியாகும் 'யுக்திய' பத்திரிகை ஆசிரியர் சுனந்த தேசப்பிரிய.

நிமலராஜனின் முதலாவது ஆண்டு நினைவு தினத்தையொட்டி யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நேற்று நடைபெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

நிமலராஜனின் நினைவுதின நிகழ்வில் கலந்துகொள்வதற்காக சுனந்த தேசப்பிரியவும் 'ராவய' பத்திரிகைச் செய்தியாளர் சுனில் விஜயசேகரவும் கொழும்பில் இருந்து வந்திருந்தனர்.

சுனந்த தேசப்பிரிய தனது உரையில் மேலும் தெரிவித்ததாவது:-

நிமலராஜனின் படுகொலை தொடர்பாக ஆணைக்குழு ஒன்று நியமிக்கப்பட்டு விசாரணைகள் நடத்தப்படவேண்டும் என்று ஊடகவியலாளர்கள் அனைவரும் போராட்டம் நடத்தவேண்டும். நடைபெறவுள்ள தேர்தலில் எந்தக்கட்சி ஆட்சிக்கு வந்தாலும் விசாரணைக்குழு ஒன்று நியமிக்கப்படவேண்டும் என்று சுதந்திர ஊடகவியலாளர் அமைப்பு வலியுறுத்தவுள்ளது - என்றார்.

வணபிதா சி.ஜி.ஜெயக்குமார் தனது உரையில் தெரிவித்ததாவது:-

தமது மக்களுக்காக ஆபத்துக்களையும் பொருட்படுத்தாது தனது பணிகளைச் செய்தவர்தான் ஊடகவியலாளர் மயில்வாகனம் நிமலராஜன். இவரின் இழப்பு எமது சமூகத்துக்குப் பேரிழப்பாகும்.

தனது சமூகத்தினதும் மக்களினதும் அன்றாடப் பிரச்சினைகளை வெளியுலகிற்கு அவர் தெரியப்படுத்தியது தவறா? எதற்காக அவர் கொலை செய்யப்பட்டார்? மனித நேயத்துக்கு எதிரான சக்திகளின் சூழ்ச்சிக்கு அவர் பலியாகிவிட்டார். இந்த நாட்டிலுள்ள மக்களின் ஒற்றுமைக்காக அவர் பாடுபட்டார் - என்றார்.

வட இலங்கைப் பத்திரிகையாளர் சங்கத்தின் தலைவர் எஸ்.கதிர்காமதம்பி தனது உரையில் கூறியதாவது:-

நிமலராஜனின் குரல் தமிழ்மக்களின் ஏகோபித்த குரலாக ஒலித்துக்கொண்டிருந்தது. அந்தக் குரலை அடக்கியொடுக்கவேண்டும் என்று எண்ணி ஆட்சியாளர்களும், அவர்களின் ஆதரவாளர்களும் அவரை அழித்து விட்டார்கள் - என்று குறிப்பிட்டார்.

யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் தலைவர் எஸ்.கஜேந்திரன் தனது உரையில் -

நிமலராஜன் பத்திரிகையாளர் மட்டுமல்லர்; சிறந்த சமூகசேவையாளரும்கூட. இவ்வாறான ஒருவரை எமது தேசம் இழந்தது பேரிழப்பாகும். இவர் அரசியல் கட்சிகளின் அடாவடித்தனங்களை மட்டுமல்லாமல் அரச அதிகாரிகளின் அட்டூழியங்கள், அரச பயங்கரவாதங்கள் என்பவற்றையும் வெளியுலகுக்குத் தெரியப்படுத்தினார். அரசின் அடிவருடியான ஒரு கட்சியினாலேயே அவர் கொல்லப்பட்டார் - என்று சொன்னார்.

'ராவய' பத்திரிகையின் செய்தியாளர் சுனில் விஜயசேகர உரையாற்றும்போது குறிப்பிட்டதாவது:-

நிமலராஜன் யாழ்.மாவட்டத்துக்கு மட்டும் உரிய பத்திரிகையாளர் அல்லர். இலங்கை முழுவதற்குமான பத்திரிகையாளர். சகல பத்திரிகையாளர்களுக்கும் ஓர் இணைப்புப் பாலமாக அவர் திகழ்ந்தார். தமது மக்களின் அபிலாசைகள், துன்ப துயரங்கள் என்பவற்றைப் பற்றியே அவர் எப்பொழுதும் பேசுவார். குறுகிய இனவாதம் பற்றிப் பேசுபவர் அல்லர் நிமலராஜன். அப்படியானவர் ஏன் கொலை செய்யப்பட்டார்? இந்தக் கொலைக் கலாசாரத்துக்கு நாம் முற்றுப்புள்ளி வைக்கவேண்டும் - என்றார்.

இந்த நிகழ்வில் ஓய்வுபெற்ற நதிபதி மு.திருநாவுக்கரசு, மூத்த பத்திரிகையாளர் எஸ்.பெருமாள் ஆகியோரும் உரையாற்றினார்கள்.

நிகழ்வின் ஆரம்பத்தில் இரண்டு நிமிடநேரம் மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது. நிமலராஜனின் உருவப் படத்துக்கு அவரது சிறிய தந்தையும் சிறிய தாயாரும் மலர்மாலைகள் அணிவித்து அஞ்சலி செலுத்தினர்.

நினைவுச் சுடர்களை பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத் தலைவர் க.தேவராஜா, பேராசிரியர் சி.க.சிற்றம்பலம், மாமனிதர் கலைஞானி, கலாநிதி என்.சண்முகலிங்கன், யாழ்.சேவை ஒலிபரப்பின் அதிகாரி அருஜ த சில்வா ஆகியோர் ஏற்றினர்.

(ம-9-10-73-180)

## திருட்டுச் சந்தேக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வினர் பிடித்ததாகவும் -

அந்த நபர் தாக்குதலில் உயிரிழந்ததாகவும் - கூறப்படுகின்றது.

இது தொடர்பான சந்தேகத்திலேயே விழிப்புக்குழுவைச் சேர்ந்த 8 பேரை பொலீஸார் கைது செய்து தடுத்து வைத்தனர்.

இதேவேளை -

இந்தச் சம்பவத்தில் உயிரிழந்ததாக் கூறப்படும் ஞானப்பிரகாசம் அமிர்தலிங்கம் (கிளி - வயது50) என்பவரது சடலத்தை மாதனைப் பகுதியிலிருக்கும் பாழடைந்த வீடொன்றிலிருந்து பருத்தித்துறைப் பொலீஸார் மீட்டு மந்திகை ஆஸ்பத்திரியில் ஒப்படைத்துள்ளனர்.

சடலம் பருத்தித்துறை மூன்றாம் குறுக்குத் தெருவைச் சேர்ந்த ஞானப்பிரகாசம் அமிர்தலிங்கம் என்பவருடையதே என்று அவரது மகனான அன்புலிங்கம் என்பவரால் அடையாளம் காட்டப்பட்டது.

இவரது மரணம் தொடர்பான விசாரணைகள் பருத்தித்துறை மேலதிக நீதிவான் அபிரேம்சங்கர் முன்னிலையில் நேற்று இடம்பெற்றன.

மரண விசாரணைகளின் போது பருத்தித்துறை விழிப்புக்குழுவில் பணியாற்றிய இருவரும், திருட்டுச் சந்தேகநபர் எனக் கருதப்படும் பொன்னம்பலம் கோணேஸ்வரன் என்பவரும் சாட்சியமளித்தனர்.

(ம-15-31-117-118-173)

## அமைச்சர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டியாகச் சந்திக்காத ஒருவரால், தலை நகரில் எப்படித் தேர்தல் பிரசாரத்தை வழிநடத்த முடியும் என்று பொ.ஐ.முன்னணிக்குள் சில வட்டாரங்கள் கேள்வி எழுப்பியுள்ளன.

"இந்த நேரத்தில் எதிர்க்கட்சிக் கூட்டமைப்பைத் தோற்கடிக்க எங்களுக்குப் புதியமுகம் ஒன்று தேவைப்படுகின்றது. கொழும்பு மாவட்டத்தைப் பொறுத்தவரை லக்ஷ்மன் கதிர்காமர் போன்ற கவர்ச்சி மிக்க வேறு தலைவர்கள் எங்களுக்கு இல்லை" - என்று பொ.ஐ.முன்னணியின் மூத்த தலைவர் ஒருவர் குறிப்பிட்டார்.

கொழும்பு மாவட்டத்தில் போட்டியிடும் பொ.ஐ.முன்னணி வேட்பாளர் பட்டியலில் தமக்கு முதன்மை இடம் வழங்க முன்வந்ததை ஏற்றுக்கொள்ள லக்ஷ்மன் கதிர்காமர் மறுத்துவிட்டார் என்றும் -

"அது எனது வேலை அல்ல" ("It is not my business") என்று தமக்கு நெருங்கியவர்களிடம் அவர் நேற்றுப் பிற்பகல் கூறினார் எனவும் -

இணையத்தளச் செய்தி ஒன்று தெரிவித்தது.

(உ)

## பூமிபுத்திர...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களைப் பாதுகாப்பதற்காகவே தமது கட்சி தேர்தலில் போட்டியிடுவதாகவும் -

தமது போராட்டம் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படும் எனவும் - பூமிபுத்திர கட்சித் தலைவர் கலாநிதி ஹரிச்சந்திர விஜயதுங்க தெரிவித்துள்ளார்.

(ம-4)


**தரம் - 6 அனுமதி**

தரம் - 6 அனுமதிக்கான விண்ணப்பப்படிவத்தினைக் காரியாலயத்தில் வந்து பெற்றுக்கொள்ளவும்.

விண்ணப்ப முடிவு திகதி: 10.11.2001

அதிபர்,
யா/யூனியன் கல்லூரி,
தெல்லிப்பழை.


## விழிப்புக் குழு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மூடப்பட்டிருந்தன. பருத்தித்துறையிலிருந்து வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் பஸ் சேவைகளோ தனியார் பஸ் சேவைகளோ இடம்பெறவில்லை.

நேற்றுக்காலை பருத்தித்துறை பஸ் டிப்போவுக்கு முன்பாகக் கூடிய நூற்றுக்கணக்கான பொதுமக்கள், பஸ்கள் சேவையில் ஈடுபடாதவாறு மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர். டிப்போவுக்கு எதிரேயுள்ள பருத்தித்துறை பிரதேச செயலக வாசலிலும் சுலோக அட்டைகளைத் தாங்கியவாறு அவர்கள் சிலமணிநேரம் மறியலில் ஈடுபட்டனர்.

பின்னர், காலை 9.30 மணியளவில் பருத்தித்துறையில் இருந்து ஊர்வலமாக வதிரியில் உள்ள நீதிமன்றக் கட்டடப் பகுதிக்கு அவர்கள் சென்றனர். கைதுசெய்யப்பட்ட விழிப்புகுழு உறுப்பினர்களை விடுவிக்குமாறு கோரி நீதிமன்றம் முன்பாக அவர்கள் அமர்ந்திருந்தனர்.

பொதுமக்கள் நீதிமன்றுக்கு ஊர்வலமாகச் சென்ற சமயம் ஐ.தே.கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் தி.மகேஸ்வரன், பருத்தித்துறை பிரதேச சபைத் தலைவர் ஐ.ஸ்ரீரங்கேஸ்வரன் ஆகியோரும் உடன் சென்றனர்.

மாலை 5.30 மணியளவில் விழிப்புக்குழு உறுப்பினர்கள் 8 பேரும் பருத்தித்துறை மேலதிக நீதிவான் அபிரேம்சங்கர் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டனர். அவர்கள் அனைவரையும் தலா 10ஆயிரம் ரூபா சரீரப் பிணையில் செல்ல நீதிவான் அனுமதித்தார். இதனை அடுத்து அங்கு நிலைமை வழமைக்குத் திரும்பியது.

பருத்தித்துறையில் இடம்பெற்ற திருட்டுக்களுடன் தொடர்புடையதாகக் கருதப்படும் ஒருவர் கடந்த திங்கட்கிழமை இரவு அப்பகுதி விழிப்புக்குழுவினரால் மடக்கிப்பிடிக்கப்பட்டார். அவர் பின்னர் பருத்தித்துறை பொலீஸில் ஒப்படைக்கப்பட்டார்.

இவருடன் சேர்ந்த மற்றுமொருவரையும் விழிப்புக் குழுவினர் பிடித்துத் தாக்கியதில் அவர் உயிரிழந்தார் என்ற சந்தேகத்தின் பேரிலேயே விழிப்புக்குழுவைச் சேர்ந்த 8 பேரைப் பொலீஸார் விசாரணைகளுக்காக அழைத்து, தடுத்து வைத்திருந்தனர் என்று கூறப்பட்டது.

(ம-15-31-117-118-173)

## கூட்டணியின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குறித்தும் தற்போது ஆலோசிக்கப்பட்டு வருகின்றது.

திருகோணமலையில் கூட்டணிக்கு 5 இடங்களும் காங்கிரஸ், ரெலோ ஆகியவற்றுக்கு தலா ஓரிடமும் வேட்பாளர் பட்டியலில் வழங்கப்படும்.

மட்டக்களப்பு மாவட்ட வேட்பாளர் பட்டியலில் கூட்டணி ஐந்து இடங்களையும் ரெலோ இரு இடங்களையும் காங்கிரஸ் ஓரிடத்தையும் பெற்றுக்கொள்ளும்.

வன்னி தேர்தல் மாவட்டத்தில் ரெலோ - 4, கூட்டணி - 3 இடங்களும் மற்றிரு கட்சிகளுக்கு தலா ஓரிடமும் வேட்பாளர் பட்டியலில் ஒதுக்கப்படும்.

அம்பாறை (திகாமடுல்ல) தேர்தல் மாவட்டத்தில் இடப்பங்கீடு, தமிழர் மகாசபையின் ஆலோசனையுடன் மேற்கொள்ளப்படும்.

கொழும்பில் போட்டியிடுவது குறித்தும் - மலையகத்தில், மலையகக் கட்சிகளின் கூட்டமைப்பில் இணைந்து போட்டியிடுவது சம்பந்தமாகவும் - நேற்று தமிழ்க்கட்சிகளின் கூட்டமைப்பின் கூட்டத்தில் கொள்கையளவில் தீர்மானிக்கப்பட்டதாக அறிய வந்தது. இந்தக் கூட்டமைப்புக்குப் பெயரிடுவது குறித்து இன்று முடிவு செய்யப்படும் என்றும் -

எடுக்கப்பட்ட தீர்மானங்கள் தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கட்சித் தலைவர்கள் இன்று ஒப்பமிடுவர் என்றும் - மேலும் தெரிவிக்கப்பட்டது.

(உ)

## தேர்தல்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டில் தேர்தல் பணிகளை கண்காணிப்பதற்கு பிரதிப் பொலீஸ்மா அதிபர் …ாகினி நவரட்ணவின் தலைமையில் …னியான பிரிவு ஒன்று அமைப்பது …னத் தீர்மானிக்கப்பட்டது. (ம-4)

## வன்னிக்கான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ளனர்.

"வன்னிப் பிரதேசத்துக்கு குறிப்பிட்டளவு எரிபொருளை பங்கீட்டு அடிப்படையில் மட்டும் எடுத்துச் செல்ல முடியும் என்று கட்டுப்பாடு விதித்ததன் மூலம், இந்த நாட்டில் ஏனைய மக்களுக்கு வழங்கப்பட்ட அடிப்படை உரிமை எமக்கு மறுக்கப்பட்டுள்ளது. இந்த உத்தரவை ரத்துச் செய்வதோடு இந்த உத்தரவின் கீழான நடைமுறையினால் எமக்கு ஏற்பட்டுள்ள இழப்பீட்டுக்கு நஷ்டஈடு வழங்கவேண்டும்" - என்று மனுதாரர்கள் தமது மனுக்களில் கோரியுள்ளனர்.

அடிப்படை மனித உரிமை மீறல் தொடர்பாக ஒரு மனுத் தாக்கல் செய்யப்பட்டால் அந்த மனு மீதான முடிவை அல்லது தீர்ப்பை அது தாக்கல் செய்யப்பட்டு இரண்டு மாதங்களுக்குள் உயர்நீதிமன்றம் வழங்கவேண்டும் என்பது அரசமைப்புச் சட்ட விதி ஆகும்.

(உ)


**இரகுநாதையர் பஞ்சாங்க மாதக் கலண்டர்-2002**
**வெளிவந்துவிட்டது..!**

விலை ரூபா 60 மட்டுமே!

மொத்தமாகவும் சில்லறையாகவும்
பெற்றுக்கொள்ள---

சோதிட விலாச புத்தகசாலை

46, பெரியகடை, யாழ்ப்பாணம். கே.கே.எஸ் வீதி, கொக்குவில்.

சோதிட பரிபாலனமடம், கொக்குவில். தொலைபேசி: 3125



**மரண அறிவித்தல்**

**செம்பொற்சோதி குமாரகுலசிங்கம்**

(பப்பா சாஸ்திரி)

(கட்டட திணைக்கள மேற்பார்வையாளர்)

சங்கானையைப் பிறப்பிடமாகவும் கரணவாயை வசிப்பிடமாகவும் கொண்ட செம்பொற்சோதி குமாரகுலசிங்கம் நேற்று (17.10.2001) புதன்கிழமை காலமானார்.

அன்னார் வள்ளியம்மையின் பாசமிகு கணவரும் வரதராணி (லண்டன்), காலஞ்சென்ற கிருஷ்ணசோதிவேல் ஆகியோரின் அன்புத் தந்தையும் பொன்னம்பலதாஸின் (லண்டன்) அன்பு மாமனாரும் ஜனனி, ஆரணி ஆகியோரின் அன்புப் பேரனும் மகேஸ்வரி, தனபாலசிங்கம்; குலேந்திரசிங்கம், கருணலிங்கம், பூமாதேவி ஆகியோரின் அன்பு சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.10.2001) வியாழக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சோளங்கன் பூவரசம்திட்டி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சி.கோபிதாசன்
(மருமகன்)

கரணவாய் மேற்கு,
கரணவாய்.

(C/18759)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 18.10.2001இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.